நீத்தார் கடன்

பழ. அண்ணாமலை

நீத்தார் கடன்

(நகரத்தார் இல்லங்களில் நடைபெறும்
ஈமச்சடங்குகளின் முழுமையான விபரங்கள்)

பழ. அண்ணாமலை
8, நைனியப்பன் தெரு,
சென்னை – 600 001.

வெளியீடு
திருவொற்றியூர் நகரத்தார் சங்கம்
44, பெரியார் நகர்
திருவொற்றியூர்,
சென்னை – 600 019.

முதற் பதிப்பு : அக்டோபர் 1997
ஈஸ்வர ஆண்டு ஐப்பசி மாதம்

விலை ரூபாய் ஐந்து **(Rs. 5.00)**

வெளியீடு
திருவொற்றியூர் நகரத்தார் சங்கம்
44, பெரியார் நகர்
திருவொற்றியூர்,
சென்னை – 600 019.

அச்சிட்டோர்:
பாரி ஆப் செட் பிரிண்டர்ஸ்
ராயபுரம்
சென்னை – 600 013.
✆ : 5950958

முன்னுரை

நாட்டுப்புற இயல் என்பது ஒரு சமூகத்தின் மரபுவழிப் பட்ட பழக்கவழக்கங்களே. இந்த இயலுக்குள் அந்தச் சமூகத்தின் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள் முதலியன அடங்கும். எனவே நகரத்தார் சமூகத்தில் காணப்படும் பழக்கவழக்கங்களையும் சடங்குகளையும் எடுத்துக் கூறுவதே இந்நூல்.

இந்த சமூகத்தினரின் திருமண நடைமுறையையும் அதில் அவர்கள் நிகழ்ந்துகின்ற சடங்ககுளையும் விரிவாகவும் விளக்கமாகவும் முதன்முதலில் எழுதி வெளியிட்டேன். பின்னர் இவர்கள் வசித்து வருகின்ற ஊர்ப் பெயர்களை காரணங்களுடன் வெளியிட்டேன். இவர்களுடைய கணக்கியல் முறைகளும் நூலாக வெளிவந்துள்ளது.

இந்த நகரத்தார் இல்லங்களில் ஏற்படும் ஈமச்சடங்குகள் பற்றி இன்றைய இளைய சந்ததியினருக்கு முற்றும் தெரியாததாகையாலும் இனி வருகின்ற தலைமுறையும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற அவாவினாலும், பலரும் வேண்டிக் கேட்டுக்கொண்டதால் நூல் வடிவில் உருவாக்கப் பெற்றிருக்கிறது.

இந்த நூலை எழுதுவதற்கு என்னுடன் இருந்து உதவிய பள்ளத்தூர் கதி. சோலைமலை (கார்போரண்டம்) ஆத்தங்குடி ச. சுப்பிரமணியன் (நியூ அம்பாடி எஸ்டேட்) இருவரையும் என்னால் மறக்க இயலாது அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

இந்த நூலை எழுதும்போது என் உடன் இருந்து குறிப்புகள் எடுத்துத்தந்து நான் சொல்லச் சொல்ல எழுதி உதவிய என் உடன்பிறவா இளவல் தேவகோட்டை முல்லை காந்தி ராமசாமி அவர்களுக்கு நன்றி

இந்த நூல் வெளிவருவதற்கு ஊக்கமும் உதவியும் நல்கிய ஏனையோருக்கும், இந்நூலை வெளியிட ஒப்புக்கொண்ட திருவொற்றியூர் நகரத்தார் சங்கத்தினருக்கும் என் மனம் நிறைந்த நன்றி.

வழக்கம்போல என் குடும்பச் சிக்கல்கலையும் தொல்லைகளையும் என் கவனத்திற்குக் கொண்டு வராமல் என்னை எழுத்துப்பணிக்கே ஆளாக்கிவிட்ட என் துணைவி திருமதி. சிவகாமிக்கும் என் மகன் பழநியப்பனுக்கும் என் அன்பும் வாழ்த்துகளும்.

அன்புடன்
பழ. அண்ணாமலை.

வரலாறு - சுருக்கமாக.

"மகுட தனவைசியர், பூபாலர், நாட்டுக்கோட்டை நகரத்தார் எனப் பெயர் பெறும் செட்டியார்கள் ஆதியில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்து வந்தவர்கள். காஞ்சிபுரத்தில் உள்நாட்டு வணிகம் காரணமாகவும், மாமல்லபுரத் துறைமுகத்திலிருந்து மரக்கலம் மூலமாக வெளிநாட்டு வாணிகம் செய்பவர்களாகவும் விளங்கி வந்தார்கள். அக்காலத்தில் காஞ்சிபுரம் உள்ளிட்ட தொண்டை மண்டலம் முழுவதும் சோழநாடாகவே இருந்தது.

கரிகால் சோழன் காலத்திற்குப் பின் அதாவது ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன் "வெள்வேற்கிள்ளி" என்னும் சோழ மன்னன் ஒருவன் நாகநாட்டைச் சேர்ந்த பீலிவளை என்னும் பெண்ணைக் காதலித்து வந்தார். அவள் அம்மன்னை மணக்க ஒரு நிபந்தனை விதித்தாள். அதற்கு அம்மன்னனும் இசைந்தான் அதன்படி அவளுக்குப் பிறந்த மைந்தனுக்குச் சோழ நாட்டில் பாதியை வழங்கவேண்டும் என்றதும் அவள் நாகநாட்டிற்குத் திரும்பிச் சென்றுவிட்டாள். அவளுக்கு ஆண் குழந்தை பிறந்து, தக்க பருவம் வந்ததும் அக்குழந்தையை கப்பல் வாணிகம் செய்யச் சென்றிருந்த ஒரு வணிகக் கூட்டத்தின் மூலம் மன்னனிடம் சேர்க்கும்படி அனுப்பிவைத்தாள். அந்தக் குழந்தை வந்த படகு நாகைத் துறைமுகத்தை அடுத்துக் கடல் அலைகளால் மொத்துண்டு உடைந்துவிட்டது. அப்படகில் இருந்தவர்கள் எப்படியோ உடைந்த படகின் மாத்துண்டுகளைப் பிடித்துக் கொண்டு கரை சேர்ந்தனர். அவனை அழைத்து வந்த வணிகர் கூட்டம் அம்மைந்தனை மன்னனிடம் சேர்ப்பித்தனர். அச்சோழனுக்குப் பீலிவளைக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின்படி அம்மைந்தன் கழுத்தில் தொண்டைமண்டலக் கொடியுடன் இருந்தார். தொண்டை மாலையுடன் இருந்த இவனை அலைகள் கரை சேரவிட்டதால் 'தொண்டைமான் இளந்திரையன்' எனப் பெயர் பெற்றார். மன்னனும் நிபந்தனைக்கேற்ப சோழநாட்டின் ஒரு பகுதியை அவனுக்கு வழங்கினான். தொண்டைமான் ஆண்டதால் 'தொண்டை நாடு' என அப்பகுதி பிற்காலத்தில் பெயர் பெற்றது. தென் பெண்ணை ஆற்றுக்கு வடக்கே திருப்பதிக்கு தெற்கே. கடலுக்கு மேற்கே, பவள மலைக்குக் கிழக்கே என்ற இந்த நான்கு எல்லைகளுக்குள் உட்பட்ட நாடு தொண்டை நாடாயிற்று.

வெள்வேற்கிள்ளி சோழநாட்டின் வடபகுதியை இளந்திரையனுக்கு வழங்கிய பின் காஞ்சிபுரத்திலிருந்த பல துறைகளில் வாணிகம் செய்துவந்த நம் முன்னோர்களை அழைத்து அவர்களை எல்லாம் சோழநாட்டில் வந்து குடியேறி தங்கள் வாணிகத்தை நடத்தும்படியும் அதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தான் செய்து தருவதாகவும் கூறினான். அதற்கேற்ப நகரத்தார்களும் காஞ்சிபுரத்தை விட்டுப் புறப்பட்டு சோழநாட்டில் காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், காரைக்கால் முதலான நகரங்களில் குடியேறினர்.

காஞ்சிபுரத்திலிருந்து வாழ்ந்து வந்ததால்தான் இவர்களுக்கு 'நகரத்தார்' எனப் பெயர்பெற்றனர். இவர்களில் மிகப் பெரும்பாலோர் காவிரிப் பூம்பட்டினத்திலேயே வாழ்ந்து வந்தனர். அவர்கள் உள்ளூர்களிலும் வெளியூர்களிலும் பிற மாநிலங்களுக்கும் பொதிமாடு, வண்டி, படகுகள் மூலம் சென்று வாணிகம் செய்து வளம்பெற விளங்கி வந்தனர். இவர்கள் தங்கள் வாணிப முறைகளை மிக ஒற்றுமையுடனும் ஒழுங்குடனும் நடத்தி வந்தனர். பெரும்பாலும் வெளி இடங்களுக்குச் செல்பவர்கள் கூட்டமாகவே செல்வர். இப்படி கூட்டமாக வெளியிடம் செல்வோரை "சாத்து" (TRADERER CARAVAN) என்று அழைக்கப் பெற்றனர். பிற நாடுகளுக்குக் கடல் வாணிகம் செய்தவர்களை "மணிக்கிராமம்" (MERCANTILE GVILD) என்று அழைக்கப் பெற்றனர். எல்லா வகையான வணிகர்களும் தங்கள் தொழில் செம்மையாக நடைபெற ஏற்படுத்திக் கொண்ட ஓர் அமைப்பு "நகரம்" (CHAMBER OF COMMERCE) எனப் பெயர் பெற்றது.

இவர்கள் தங்கள் நகரம் செயல்படுவதற்கு ஒரு பெரிய மாளிகை அமைத்திருந்தனர். அதற்கு இலச்சினையாக 'சித்திர மேழி'யையும் கொடியாக சிங்கத்தையும் கொண்டிருந்தனர். மேலும் தங்கள் நகர மாளிகைக்கு வெள்ளிக் கதவும் அமைத்திருந்தனர்.

மன்னரும் மதிக்கப் பல் வகையாலும் சிறந்து விளங்கினர். மன்னருக்கு முடிசூட்டும் பெருமையும் தகுதியும் உடையவர்களாய் விளங்கி வந்தனர். பல அறப்பணிகளையும் ஆற்றி கொடை நலம் பெற்றிருந்தனர். இவர்கள் கொடைச் சிறப்பையும், நடைச் சிறப்பையும், நேர்மையையும் பற்றிப்

பலப்பல பாடல்கள் உள்ளன. இங்ஙனம் இவர்களின் சிறந்த வாழ்க்கை சுமார் ஏழெட்டு நூற்றாண்டுகளுக்குமேல் காவிரிப்பூம்பட்டினமாகிய பூம்புகாரில் விளங்கிற்று. அதன்பிறகு சுமார் கி.பி. 10-ம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட மன்னனுக்கும் நகரத்தார்களுக்கும் விரோதம் ஏற்பட்டது. அதற்குப் பலவாறான காரணங்கள் சொல்லப்படுகிறது.

1. இவர்கள் கொடைச் சிறப்பால் ஏற்பட்ட பொறாமை
2. இவர்கள் தங்கள் நகர மாளிகைக்கு வெள்ளிக் கதவு அமைத்தது.
3. காவிரி ஆறு பெருக்கெடுத்தபோது அல்லது கடல் பொங்கி எழுந்த போது மன்னன் செய்வதறியாது மயங்கி நிற்க இவர்கள் தங்களிடமிருந்த பஞ்சுப் பொதியை அடுக்கி வெள்ளத்தைத் தடுத்த நிலையில் தனக்குக் குறைவை ஏற்படுத்திவிட்டதாக ஏற்பட்ட வெறுப்பு
4. தெருவில் விளையாடிக் கொண்டிருந்த 5 வயது நகரத்தார் வீட்டுப் பெண் குழந்தையை அதன் அழகில் ஈர்க்கப் பெற்று எடுத்துச் சென்றதில் நகரத்தார்கள் நடந்துகொண்ட விதத்தால் ஏற்பட்ட சினம்.

இங்ஙனம் பல காரணங்களால் அந்தக்கால மன்னனுக்கும் நகரத்தார்களுக்கும் ஏற்பட்ட மனக்கசப்பு பகை உணர்வாக மாறிவிட்டது . அந்த நிலை நாளுக்கு நாள் வளர்ந்ததே அன்றி, குறைந்து ஒரு சு மூகமான நிலை ஏற்பட வழிபிறக்கவில்லை. நகரத்தார்களும் தன்மான உணர்வில் பிடிவாதமாக இருந்தனர். இந்த உணர்வாலும் அச்சத்தாலும் மன்னன் தங்களைத் தண்டிக்கக்கூடும் என அஞ்சி தீக்குளித்து மிகப்பெரும்பாலானவர்கள் உயிர்விட்டனர். இது எவ்வளவு உண்மை எனத் துணியத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொகையினர் சோழ நாட்டைவிட்டு வெளியேறி பாண்டிய நாடு வந்து சேர்ந்தனர். அப்படி வந்தவர்கள் தொகை ஐநூறு என்பது துணிய முடிகிறது. நகரத்தார்களுக்கு 'ஐநூற்றுவர்' என்ற பெயர் இருப்பதாலும், இவர்கள் வசித்து வந்த பகுதி 'ஐநூற்றுவப் பெருந்தெரு' என்று கல்வெட்டுக்கள் கூறுவதாலும் இங்ஙனம் முடிவு செய்வது எளிதாகவும் சரியாகவும் இருக்கிறது.

இப்படி நாடு பெயர்ந்து வந்தவர்கள் யாவரும் பாண்டிய நாட்டில் நாட்டரசன் கோட்டையில் ஒன்றாக வாழ்ந்து வந்தர். அந்தக் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்டுவந்த வீரபாண்டிய மன்னனிடம் வேண்டி ஏழு கோயில்களைப் பெற்று அவற்றைத் தத்தம் கோத்திரமாகக் (கோயில் வழி குடிமக்கள்) கொண்டு ஆங்காங்கே குடியேறியும் வழிபட்டு வந்திருக்கின்றனர். இவர்கள் முதன் முதலில் மன்னனிடம் கேட்டுப் பெற்ற ஏழு கோயில்கள்

இளையாத்தங்குடி
மாத்தூர்
வைரவன் கோயில்
நேமம்
இலுப்பைக்குடி
சூரக்குடி
வேலங்குடி ஆகியவைகளாகும்.

இரணியூர், பிள்ளையார்பட்டி ஆகிய இரு கோயிலாரும் 'திருவேட்பூருடையார்' எனப் பெரிய ஒரே பிரிவாக இளையாத்தங்குடியில் விளங்கி வந்துள்ளனர்.

ஆகவேதான் நகரத்தார்களை ஏழகத்தார் என்றும் ஏழுவழியினர் என்றும் கூறிவந்திருக்கின்றனர். கல் வெட்டுகளில் ஏழகத்தார் எனக் காணப்பெறுகின்றது. இவர்களுடைய காப்புப் படைக்கு 'ஏழகப்படை' என்ற பெயரும் காணப்பெறுகின்றது. அந்த ஏழகப்படை தங்கியிருந்த இடம் காரைக்குடியை அடுத்த கழநிவாசல் ஆகும். கழநிவாசலுக்குப் பழைய பெயர் ஏழகப்பெருந்தெரு என்பதாகும். வைரவன் கோயிலாரின் கோத்திரப் பெயர் 'ஏழகப் பெருந்தெருவான வீரபாண்டியபுரமுடையார்' என்பது இன்றும் அங்குள்ள பெருமாள் கோவிலுக்கு 'ஏழகப் பெருமாள் விண்ணகரம்' என்பதும் குறிப்பிடத் தக்கனவாகும். நகரத்தார்களுக்கு படை உண்டா என்று சிலர் ஐயப்படலாம். உண்டு. நிச்சயம் உண்டு. நாடுகாக்க மன்னர் படை வைத்திருப்பர். வாணிகப் பொருள் காக்க வணிகர்கள் படை வைத்திருப்பர். தொல்காப்பியம் மரபு 77-ல்

"இடை இரு வகையோர்
அல்லது நாடின்
படை வகை பெறார்
என்மனார் புலவர்"

எனக்குறிப்பிடப்படுகிறது. இடையிரு வகையோர் என்பது அந்தணர் , அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகையில் தலையும் கடையும் ஆகிய இருவகையினருக்கு இடையே உள்ளவர்கள் என்றுதானே பொருள் கொள்ளவேண்டும்.

ஐநூற்றுவர் என்பது நகரத்தார்களுக்குரிய பெயர் என்பதாலேயே மாத்தூர் பெருமான் "ஐநூற்றீச்சுவரர்" எனப் பெயர் பெற்றுள்ளார் நானா தேசங்களுக்கும் சென்று வாணிகம் செய்பவர்களானதால் 'நானாதேசிகன்' என்றும் 'தேசி' என்றும் நகரத்தார்கள் பெயர் பெற்றனர். அதனாலேயே பிள்ளையார்பட்டிப் பெருமான் 'தேசி விநாயகப் பிள்ளையார்' என்றும் 'சூரக்குடிப் பெருமான்' தேசிகநாதர்' என்றும் பெயர் பெறுவாராயினர்.

சுமார் 12-ம் நூற்றாண்டை ஒட்டி திருவேட்பூருடையார் பிரிவினராகிய இரணியூராரும் பிள்ளையார்பட்டியாரும் தங்களுக்குள் புள்ளி எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இளையாத்தக்குடிக் கோயிலிலிருந்து பிரிந்து, பாண்டியனிடம் வேண்டி முறையே இரணியூரையும், பிள்ளையார்பட்டியையும் கேட்டுப் பெற்று அங்கு குடியேறி கோயில் அமைத்து, வழிபட்டு வாழ்ந்து வந்திருக்கின்றனர். இதற்குச் சான்றாகப் பிள்ளையார்பட்டிக் கல்வெட்டு விளங்குகிறது. காரைக்குடி ஐநூற்றுவப் பெருந்தெருவில் உள்ள நகரத்தார்களுக்கு விற்று விலைப்பிரமாணம் செய்து கொடுத்த செய்தி இந்தக் குடைவரைக் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் நன்கு புலப்படுத்துகின்றன. இஃது சுமார் 12-ம் நூற்றாண்டில் என்று அறிய முடிகிறது.

காலப்போக்கில் ஒன்பது கோயில்கள் உள்ள ஊர்களில் வசித்து வந்த நகரத்தார்கள் வெவ்வேறு ஊர்களில் சென்று வசிக்கலாயினர். அப்படிக் குடியேறிய ஊர்கள் தொண்ணூற்றி ஆறு. எனவேதான் தொண்றூறாரூர் நகரத்தார்கள் எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றனர்.

அந்த தொண்ணூற்றாரூரில் வாரிவயல், பொய்யனூர், சிவரக்கோட்டை, ஆலங்குடி, மேலமாகாணம், கூத்தலூர், ஆர்க்காடு, வித்திராவயல், சித்தாட்டிவயல். நெய்வாசல், இளையாத்தக்குடி, வைரவம்பட்டி, நேமம், இரணியூர், குறட்டி, தட்டட்டி, கம்பனூர், இலுப்பைக்குடி, மாத்தூர், கீரணிப்பட்டி, சேந்தணி, எழுவன்கோட்டை, கீழக்கோட்டை ஆகிய ஊர்களில் தற்போது நகரத்தார்கள் வசித்துவரவில்லை.

நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்து ஊர் அமைத்துக் குடியேறிய நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டிணத்தைப் போலவே நகர நிர்மாணம் செய்திருக்கின்றனர். ஊரின் நடுவில் பெரும் சதுக்கம் அமைத்து அதில் பல திருக்கோயில்களையும் அமைத்து, அதைச் சுற்றி வீடுகள் கட்டிக் கொண்டிருப்பதை இன்றும் காண முடிகிறது. காவிரிப்பூம் பட்டிணத்திலிருந்து வரும்போது தங்களுடன் உவச்சர்களையும் அழைத்து வந்து கண்ணகிக்குப் பீடம் அமைத்துக் கோயில் எடுத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். அதுவே கண்ணாத்தாள் அல்லது கண்ணுடைய அம்மன் கோயிலாக இன்று விளங்குகிறது.

காவிரிப்பூம்பபட்டிணத்திலிருந்து வந்தவர்ளில் நகரத்தார்களில் சிலர் புலால் உணவு உட்கொண்டதாலோ அல்லது வேறு காரணத்தாலோ. தனித்துவிடப்பெற்றனர். மற்றவர்கள் மதுரை வழியாக மேலும் தெற்கு நோக்கிச் சென்றனர். அவர்களில் அரியூராரும் இங்ஙனமே இடையில் விடப்பட்டவர்கள் அவர்கள் பிரான்மலையச் சுற்றியுள்ள ஊர்களில் குடியேறி பிரான்மலை கொடுங்குன்றீசரைக் குல தெய்வமாகக் கொண்டு வாழ்ந்து வருவாராயினர்.

இங்ஙனமே சுந்தரத்தார் என்ற பிரிவினரும் மதுரைக்குப் பக்கத்தில் சிறுகுடி முதலிய கிராமங்களில் குடியேறி வாழ்வாராயினர். அங்கு கோயில் உள்ள தெரு 'செட்டித்தெரு' எனப்படுகிறது. அங்குள்ள பிள்ளையார் பெயர் 'தேசிவிநாயகர்' என்பதாகும். இன்றும் அந்தக் கோயில் சிறப்பாக விளங்கி வருவதைக் காணமுடிகிறது.

பாண்டிய நாட்டிற்கு வந்த நகரத்தார்கள் தொழில் காரணமாகப் பல நாடுகளுக்குக் கடல்கடந்து சென்று வந்தனர். முதன்முதலில் நாகை, திருநெல்வேலி, சென்னை, மதுரை முதலான தமிழ்நாட்டுப் பகுதிகளுக்குப் பின்னர் வங்காளம்,

கஞ்சம் முதலிய வெளி மாநிலங்களுக்கும், அதன்பிறகு யாழ்பாணம், கொழும்பு முதலிய பகுதிகளுக்கும், பின்னர் பர்மா, மலேயா, சிங்கப்பூர், செய்கோன், முதலான இடங்களுக்கும் சென்று தொழில் செய்து வந்தனர்.

முதலில் பண்டங்கள் வாங்கி விற்பதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். பின்னர் காலம் செல்லச் செல்ல பல்வேறு காரணங்களால் பணம் கொடுக்கல் வாங்கல் (BANKING) தொழிலில் ஈடுபட்டனர். ஆனாலும் பழைய வழக்கப்படியே கொண்டு விற்கப் போய் வருவதாகவே கூறிவந்தனர்.

காணி காணியாய்த் தேடிக் கோடி கோடியாய்த் தருமம் செய்து வந்த சமூகம் என்று நகரத்தார் சமூகத்தையே நல்லோர் எல்லோரும் பாராட்டுவர். மூவேந்தர் ஆட்சி முடிந்து பிறமதத்தவர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஏராளமான ஆலயங்களைத் திருப்பணி செய்து அவை அழிந்து போகாமல் காத்துவந்தனர். ஆலயங்கள் மட்டுமின்றி பாடசாலைகள், பசுமடங்கள், சத்திரங்கள், மருத்துவச் சாலைகள் முதலியனவும் தோற்றுவித்து நலம் பல புரிந்துவந்தனர்.

தற்போது நகரத்தார்கள் உயர்கல்விப் பள்ளிகள், பல்கலைக்கழகம், மருத்துவமனை போன்ற காலத்திற்கேற்ற அறங்களை செய்வதில் ஈடுபட்டுப் பயன் சுரந்து வருகின்றனர்.

மக்கள் தொகையால் சிறிய சமூகமே ஆனாலும் அறப்பணிகளால் உலகறிந்த ஒரு சமூகமாகத் திகழ்கின்றது நகரத்தார் சமூகம். காசி முதல் ராமேஸ்வரம் வரை இவர்களுடைய அறப்பணி இல்லாத இடமே இல்லை என்று சொல்லும்படி எல்லா இடங்களிலும் இவர்களின் தொண்டு நாளும் மலர்ந்து மணம்பரப்பி வருகின்றது" என்று வரலாற்றாசிரியர் கம்பன் அடிப்பொடி திரு சா. கணேசன் அவர்கள் நகரத்தார் வரலாறு என்ற தலைப்பில் நம்முடைய தோற்றத்தையும் வளர்ச்சியையும் குறிப்பிட்டிருப்பதை இங்கு உற்று நோக்குதல் வேண்டும்.

வாழ்வியல் சடங்குகள்

நகரத்தார்கள் காலங்காலமாகச் சிவநெறிச் செல்வர்களாகவே இருந்து வருகிறார்கள். இவர்களின் முன்னோர்கள் நிறைய நீளமான முடி வைத்துக்கொண்டும், காதுகளை வளர்த்துக் கொண்டும், தண்டிக்கடுக்கண், இட்டுக் கொண்டும் மூன்று விரல்பட அழியாது திருநீறு பூசி, ஆடைகளைக் கொய்து மடிவைத்துக்கட்டி அதில் திருநீற்றுப்பையும் ஜெபமாலையும் வைத்து வாழ்ந்து வந்தனர். இந்தச் சமூகத்தின் அமைப்பு ஒரு ஆலமரம் என்றால் அதன் ஆணிவேர் இவர்கள் நடத்துகின்ற சடங்குகளும் அவற்றின்பால் கொண்டுள்ள ஆழ்ந்த நம்பிக்கையுமே.

ஒரு சமுதாயத்தின் ப்ழக்கவழக்கங்களே அறிவியல் துணைக்கொண்டு, முன்னேற்றம் ஏற்படும் போது சடங்குகளாக மாறுகின்றன. நகரத்தார்கள், குழந்தை பிறந்த பிறகு நடத்தி வந்த காப்புக்கட்டுப் புதுமை, குழந்தைகள் வளர்ந்துவிட்டபிறகு கொண்டாடி வந்த கார்த்திகைப் புதுமை, திருவாதிரைப் புதுமை போன்ற நிகழ்ச்சிகளும் இவர்களுடைய பழக்கங்களாகவே இருந்து வந்திருக்கின்றன. குழந்தைகள் தக்க பருவம் அடைந்த பிறகு அவர்களுக்குச் செய்து வைக்கின்ற திருமணமும், வயது முதிர்ந்தபோது செய்து கொள்கின்ற சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் (பிறை ஆயிரம் கண்ட பெருவிழா) முதலிய விழக்களில் பெரும்பாலும் சடங்குகளின் அடிப்படையிலேயே அமைத்துக் கொண்டாடி வந்திருக்கின்றனர். இவர்கள் நடத்தி வருகின்ற சடங்குள் அர்த்தமற்றவையாகவோ அல்லது ஆடம்பரத்திற்காகவோ அல்லாமல் தங்கள் சமூகத்தின் பண்பாட்டையும், பழமையையும் அவற்றின் மேல்க் கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதற்காகவே கொண்டாடி வந்திருக்கின்றனர்.

குறிப்பிட்ட செய்கைகள் ஒரு சமூகத்தினரால் தொடர்ந்து செய்யப்பெற்று வருமானால் அவைகள் சடங்குகள் என்ப்பெயர் பெறுகின்றன. இவர்களுடைய வாழ்வியல் முறையில் எண்ணறிய இனிமையான விழாக்களும் அவைகளை ஒட்டிய சடங்குகளும் நடத்தப்பெறும். இவர்களுடைய வாழ்வியல் கூறுகளில் ஒன்றான 'இறுதிச்சடங்குகள்' பற்றிப் பல செய்திகள், நிகழ்வுகள் அறியக் கிடக்கின்றன.

பழக்கவழக்கங்களின் காரணமாகவும் சமுதாயத்தின் ஒருங்கிணைப்பின் பேரிலும், வழிவழி வந்த மரபுகளை நிலைநிறுத்தவும், விருப்பத்தின் காரணமாகவும், சூழ்நிலைகளின் அடிப்படையிலும் இந்த இறுதிச்சடங்குகள் நடத்தப் பெறுகின்றன. இறந்தவர்களுக்குச் செய்கின்ற சடங்குகள் இருவகைகயாகப் பிரிக்கலாம். ஒன்று இறந்தவரின் வீட்டில் நடைபெறும் சடங்குகள், மற்றொன்று சுடுகாட்டில் நடைபெறும் சடங்குகளாகும்.

ஒருவர் இறக்கும் போது எந்த எண்ணத்தோடு இறக்கின்றாரோ அதுவே மறுபிறப்பிற்கு வழியாக அமையும் என்பது ஆன்றோர்கள் வாக்கு. ஒருவர் இறக்கின்றபோது பொறி புலன்கள் கலங்கி நிற்கின்ற காலம். அப்போது இறக்கின்றவர்கள் தாங்களாகவே இறைவனை நினைக்கின்ற நிலை ஏற்படாது. ஆதலால் அருகில் இருக்கின்ற மற்றவர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு அழுது அரற்றி மேலும் கலங்கச் செய்யாமல் அவர்கள் அருகில் அமர்ந்து கொண்டு திருவாசகத்தில் உள்ள நீத்தல் விண்ணப்பப் பகுதியை மென்மையாக ஓதி அவருடைய உணர்வில் கலக்கச் செய்ய வேண்டும். இறப்பவர்கள் வாயில் லேசாகப் பாலோ அல்லது காசித் தீர்த்தமோ ஊற்றுவார்கள். பால் அல்லது தீர்த்தம் ஊற்றுவதால் மூச்சுத் திணறும்போது, மூச்சு அடைத்து, உயிர் பிரிந்துவிடும் என்ற அறிவியல் உண்மையை இவர்ள் அறிந்து வைத்துள்ளனர்.

ஒருவர் இறந்தவுடன் அவருடைய பூத உடலைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லக் குறைந்தது பதினைந்து இருபது மணி நேரம் ஆகும். வெளியூரில் இருக்கும் உறவினர்கள் எல்லோரும் வந்து சேரவே இந்த காலதாமதம். ஆகவே இறந்தவருடைய உடல் கெட்டுப் போகாமல் இருக்க இறந்தவருடைய வாயில் உப்புப் போட்டுநல்லெண்ணெய் ஊற்றிக் குலுக்கி விடுவார்கள். இதன்பிறகு இறந்தவருடைய கண்களை மூடிவிடுகிறார்கள். இறந்தவருடைய உடலைக் குளிப்பாட்டி, புது ஆடை அணிவித்து, திருநீறு பூசி, வெள்ளைத் துணியால் வாய், (1), கால் கட்டை விரல்கள் இரண்டையும் இணைத்தும்(2) கைகளை மடித்து வைத்தும்(3) கட்டிய பிறகு பாய் விரித்துத் தலையணை வைத்துப் படுக்கை நிலையில் தலை தெற்குப் பக்கம் இருக்கும் வண்ணம் வைக்கிறார்கள். இறந்தவருடைய தலைமாட்டில் திருவிளக்கேற்றி, தீபம் காட்டி

தேங்காய் உடைத்து வழிபடுகிறார்கள். பெரும்பாலும் நகரத்தார்கள் வெளியூர்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் சொந்த வீட்டிலோ அல்லது குடியிருக்கும் வீட்டிலோ ஒருவர் இறந்து அங்கேயே சடங்குகள் நடத்தி கொள்வதாக இருந்தால் மட்டுமே அங்கு திருவிளக்கு ஏற்றுகிறார்கள். மாறாக உடலை அவ்வூரில் உள்ள பொது இடங்களுக்கு (சொந்தவீடு அல்லது வாடகை வீட்டில் இடம் பற்றாக்குறை காரணம்) எடுத்துச் சென்று அங்கு சடங்குகள் நடத்தினால அங்குதான் திருவிளக்கு ஏற்றுகிறார்கள். பொது இடங்கள் என்று இங்கு குறிப்பிடுவது நகரத்தார்கள் வெளியூரில் கட்டியுள்ள நகர விடுதிகளைக் குறிக்கின்றன. இப்போது ஒரு சிலரைத் தவிர ஏனைய பிற நகரத்தார்கள் இந்த ஈமக்கிரியைகளை நகர விடுதியிலேயே நடத்திக்கொண்டு வருகின்றார்கள். இறந்தவர்கள் (சுமங்கலிகளாக) வாழ்வரசிகளாக இருப்பின், உடலைக் குளிப்பாட்டிய பிறகு மஞ்சள் பூசி, திருநீறு குங்குமம் இட்டு அவளுடைடிய தாலியை அவர்கள் மார்பில் பலருக்கும் தெரியும் வண்ணம் வைத்துப் படுக்க வைக்கிறார்கள். இறந்தவருடைய உடலில் கால், கை, வாய் கட்டுவதும் அவர்களுடைய பங்காளிகளே செய்கிறார்கள். இறந்தவருடைய தலைமாட்டில் வைத்துள்ள திருவிளக்கிற்குப் பக்கத்தில் நிறைநாழி (ஒரு படியில் முழுதும் பச்சை நெல் வைத்திருப்பது)யும், குந்தாணி, உலக்கை, திருநீறுத் தட்டு முதலியன வைத்திருப்பார்கள். ஒருவர் இறந்ததும் இவைகளைச் செய்தபின் புரோகிதர் ஒருவர் மூலம் பசுதானம் கொடுக்கிறார்கள்.

ஒருவர் இறந்த 21/2 மணி (ஒரு நாழிகை) நேரத்திற்குள் இந்தப் பசுதானம் செய்ய வேண்டும். ஒரு புரோகிதர் மூலம் இறந்தவருடைய உடல் தூய்மை பெறுவதற்காக புண்ணியா வாசனம் செய்து ஒரு பசுவை அவருக்குத் தர்னமாக வழங்குகிறார்கள். இந்தப் புண்ணியாவசனத்திற்கு இலை 2, பச்சரிசி படி 1, தேங்காய் 2, வாழைப்பழம் 4, வெற்றிலை பாக்கு, ஊதுபத்தி, சூடம், மாவிலை, செம்பு டம்ளர் 1, தாம்பாளம் 1 ஆகியவைத் தேவையானப்பொருள்கள். பசுமாடு கொடுக்க இயலாதவர்கள் தர்ப்பைப் புல்லை வைத்துத் தானமாகப் புரோகிதர்களிடம் கொடுத்துவிட்டு (பசுவிற்குப் பதிலாகத் தோராயமாக ஒரு தொகை கொடுக்கிறார்கள்) தேங்காய் உடைத்து வைத்து, ஊதுபத்தி, சூடம் காட்டி வணங்குகிறார்கள்.

இந்தப் பசுதானம் இறந்தவருடைய மூத்த பையன் செய்ய வேண்டும்.

இறந்தவருடைய தலைமாட்டில் ஏற்றிவைக்கும் திருவிளக்கு (நகரத்தார்கள் இதனைக் குத்துவிளக்கு எனச்சொல்வார்கள்) மனித உடல்போல் அமைந்துள்ளதை இங்கு உற்று நோக்குதல் பயன்தரும். திருவிளக்கின் அடிப்பகுதி மனித உடலின் அடிப்பாக (பாதம்)மாகவும் நடுப்பாகம் உடலாகவும் மேலே உள்ள ஐந்து மூக்குகளும் எண்ணெய் ஊற்றும் பகுதியும் முகமாகவும், அதற்கு மேல்பகுதி தலையாகவும் கொண்டு விளங்குகிறது. நமது உடலில் இறைவனால் கொடுக்கப்பெற்ற ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி இவை ஐந்தும் ஐந்து மூக்குகளாகவும் கொள்ள வேண்டும். இதில் ஊற்றப்படுகின்ற எண்ணெய் (ஆற்றல்) ஐந்து திரிகளால் எரிவதனால் எண்ணெய் தீர்ந்து கடைசியில் திரியும் எரிந்து சாம்பல் ஆகின்றது. புலன்களின் வழியே நமது ஆற்றல் செலவழிந்து உயிர் நீங்கும் நிலையைக் காட்டவே இறந்தவருடைய தலைமாட்டில் திருவிளக்கு ஏற்றி வைக்கின்றனர் என்று கொள்வது சரியான விளக்கமாக அமையும். ஒருவர் இறந்தபின் அவர்கள் வீட்டில் இறப்பு நடந்துள்ளது என்பதனை அறிவிக்கவே சங்கு ஊதுகிறார்கள். இதன்பிறகு பறைக்கொட்டுக்குச் சொல்லி அனுப்பிக் கொட்டச் செய்கிறார்கசள். அதன்பிறகு இறந்தவருடைய உறவினர்கள் (பெண்கள்) அவர்கள் பிரிவிற்காகக் கண்ணீர் சிந்தி, இறந்தவருடைய உடலைச் சுற்றி அமர்ந்துகொண்டு இசையோடு பாடலைப் பாடி ஒப்பாரி வைப்பார்கள். இந்த ஒப்பாரி பற்றி விளக்கமாகப் பின்பகுதியில் சொல்லப் பெற்றிருக்கிறது.

எப்பொழுதுமே எதையும் அமங்கலமாகச் சொல்ல விரும்பாத நகரத்தார்கள் ஒருவரின் மரணத்தை இறந்துவிட்டனர் என்று எழுதுவதே இல்லை. அதற்கு மாறாக சிவபதவி அடைந்துவிட்டார்கள் என்றோ அல்லது தற்கால வழக்கப்படி இயற்கை எய்தி விட்டார்கள் என்றுதான் எழுதுவார்கள்.

பொதுவாக ஒருவர் இறந்ததை ஊரில் உள்ள உறவினர்களைத் தவிர மற்றவர்களுக்குச் சொல்லி அனுப்புவதில்லை. பறைக்கொட்டுச் சப்தம் கேட்டவுடன், ஊரில் ஒரு சாவு நிகழ்ந்துள்ளது என அறிந்து அக்கம்பக்கத்தில்

உள்ளவர்களிடம் விசாரித்துத் தெரிந்துகொண்டு இறந்தவருடைய வீட்டுக்கு வந்து துக்கம் விசாரித்துச் செல்கின்றனர்.

இறந்தவர்கள் வீட்டில், இறந்தவருடைய அண்ணன் அல்லது தம்பி பையன்கள் இருவர் வீட்டு முகப்பில் நின்று கொண்டு தங்கள் இருகைகளையும் விரித்து வைத்துக்கொண்டு நிற்பார்கள். துக்கம் விசாரிக்க வருகின்றவர்கள் இவர்களுடைய கைகளைத் தொட்டு ஆறுதல் கூறிவிட்டுப் பிறகு வீட்டிற்குள் சென்று இறந்தவரின் உறவினர்களிடம் துக்கம் விசாரிப்பார்கள். இங்ஙனம் இருவர் கையேந்தி நிற்பதை இவர்கள் "கையேந்துதல்" என்று கூறுகிறார்கள். இதில் இரண்டு விதமான பொருள்கள் புலனாகும். ஒருவருடைய வீட்டில் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய மகனின் இயலாமையை வெளிப்படுத்துதல் என்று; மற்றொன்று, உறவினர் ஒருவரை நீ இழந்துவிட்டாலும் நாங்கள் கைகொடுத்துத் துணை நிற்போம் என்று கூறிப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒருநாள் இறப்பது உறுதி, ஆகவே வருந்தவேண்டாம் என்று ஆறுதல் கூறுவது.

உற்றார் உறவினர் வேண்டியவர்கள் எல்லோரும் வந்தபின் இறந்தவருடைய உடலை தூக்கிவந்து, நடுவாசலில் ஒரு ஓதுக்குப் புறமான இடத்தில் நாற்காலிமேல் கிடத்தியபின், இறந்தவருடைய மகன், மகள், மருமகன், பேரன், பேத்திகள் வந்து இறந்தவருடைய தலைமீது கொஞ்சம் நல்லெண்ணெய் வைத்துச் செல்வர். பின்னர் இறந்தவருடைய உடலை மீண்டும் ஒரு முறை குளிப்பாட்டி ஆடை அணிவித்து, திருநீறு பூசி, இறந்தவர்கள் பஞ்சாட்சர உபதேசம் கேட்டிருந்தால் வயதில் பெரியவர்கள் யாராவது ஒருவர் திருநீறு தண்ணீர் விட்டுக் குழைத்து தலைகீழாக அதாவது முழங்கால்களிலிருந்து நெற்றி வரை பூசி, பஞ்சாட்சர மூல மந்திரத்தை மூன்று மு றை இறந்தவருடைய காதில் சொல்லி குங்குமம் வைத்துத் தூக்கிவந்து நடுவாசலில் பந்தல்கால் நடுவில் பாய்விரித்து அதன்மேல் தெற்கு வடக்காகக் கிடத்தி வைப்பார்கள். இந்தப் பந்தக் கால் என்பது நான்கு நாவல்மரக் கம்புகளைக் கொண்டுவந்து, நான்கு களிமண் உருண்டைகளை உருட்டி அதன்மேல் இந்தக் கம்புகளை ஊன்றி, கம்புகளின் மேல் ஒரு வெள்ளைத் துணி சதுரவாக்கில் கட்டி, அதன்மேல் கொஞ்சம் நாவல் இலைகளை (கொத்தாக) போட்டு

வைப்பார்கள். இந்தப் பந்தக்கால் நடுவதும் இறந்தவருடைய பங்காளிகளில் நால்வரே செய்கிறார்கள். இறந்தவரின் உடலை இந்தப் பந்தக்கால் நடுவில் கிடத்திய பின், இறந்தவருடைய மூத்த மகள் அங்கு வைத்துள்ள குத்தாணியில் பச்சை நெல்லைப்போட்டு, உலக்கையால் குத்தியதும் பிற இரு பெண்கள் அதை முறத்திலிட்டு உமி நீங்கப் புடைத்து அரிசியாக எடுத்துக் கொள்வார்கள். (இந்த அரிசியே பின்னர் சுடுகாட்டில் வாய்க்கரிசியாகப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். தற்காலத்தில அவ்வளவு விரைவாக நெல்குத்தி, உமி நீங்கி, அரிசி எடுக்க முடியாது என்று எண்ணி, நெல்லோடு தேவையான பச்சரிசியையும் சேர்த்துக்கொண்டு, குத்தி எடுத்துக் கொள்கின்றனர்) இப்படி பச்சை குத்தி முடிந்ததும் இறந்தவருடைய தலைப்பக்கம் அவருடைய மனைவியைக் கூட்டி வந்து உட்கார வைக்கிறார்கள். பிறகு இறந்தவருடைய மூத்தபையன் (பையன்கள் இல்லை எனில் அவருடைய அண்ணன் தம்பி பையன்கள் அவர்களும் இல்லையெனில் பங்காளிகளில் ஒருவர்) தோள்மீது ஒரு சருவச்சட்டியில் (இப்பொழுது இது வழக்கத்தில் இல்லை என்று தெரிகிறது) ஒரு வெள்ளைத் துணியை வைத்துக்கொண்டு முன்னே செல்ல, அவர்கள் பின்னால் இறந்தவர்களுடைய பங்காளிகள் அனைவரும் உடன் செல்ல பந்தக்காலின் நடுவே கிடத்தப்பட்டுள்ள இறந்தவருடைய உடலை மூன்றுமுறை சுற்றி வந்து, மகன் தோளில் வைத்துள்ள வெள்ளைத் துணியை இறந்தவருடைய உடலின் மீது வைக்க வேண்டும். பின்னர் இறந்தவருடைய மனைவியின் சகோதரர்கள் அவருடைய பங்காளிகள் அனைவரும் முன்பு, சொல்லியது போல சகோதரன் தோளில் வெள்ளைத் துணியை வைத்துக் கொள்ள மற்றவர்களுடன் மூன்று முறை சுற்றி வந்து துணியை இறந்தவருடைய உடலின் மீது வைக்க வேண்டும். அதன் பின்னர் இறந்தவருடைய மகள், பேரன் பேத்திகள், மருமக்கள் அனைவரும் இந்தப் பந்தல்காலை மூன்று முறை சுற்றிவந்து கீழே விழுந்து வணங்கி அங்கு வைத்துள்ள திருநீறை எடுத்துப் பூசிக் கொள்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சிகள் வீட்டிற்குள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது வெளியே பறைக்கொட்டுபவர் தென்னை ஓலையால் பாய் முடைந்து வைத்தும் ஒரு மண்சட்டியில் நெருப்பை வளர்த்து

807

அதை முக்கோண வடிவில் செய்யப் பெற்ற அமைப்பு ஒன்றில் வைத்து, தூக்கிச் செல்வதற்குத் தோதாக கயிறு கட்டி தயார் செய்தும் வைப்பார்கள்.

இறந்தவருடைய உடலைப் பந்தல்காலில் இட்டு எல்லோரும் சுற்றி வந்த பின்னர் இந்தப் பச்சை ஓலையால் செய்யப்பட்டதை (இதனைப் பாடை என்று சொல்லுகிறோம்) கொண்டு வந்து பந்தக்காலின் பக்கத்தில் வைத்து, பங்காளிகளில் சிலர் இறந்தவருடைய உடலைத் தூக்கி இந்தப் பாடையில் வைத்து வெள்ளைத் துணியால் (இதனைக் கச்சை என்று சொல்கிறார்கள். இதன் நீளம் சுமார் 51/2மீட்டர்) பாடையுடன் உடலைச் சேர்ந்து இறுகக் கட்டி, மாலை அணிவித்து, பங்காளிகள் தூக்கிக் கொள்ள, இறந்தவருடைய மூத்த முகன் தீச்சட்டியை ஏந்திச் செல்ல, அனைவரும் (பெண்கள் நீங்கலாக) சுடுகாட்டிற்குச் செல்கிறார்கள். பாடையைத் தூக்கிச் செல்லும் போது நாம் செல்லும் திசையை நோக்கி இறந்தவருடைய கால்பக்கம் இருக்க வேண்டும். இறந்தவருடைய உடலைத் தூக்கிச் சென்றதும் பெண்கள் அனைவரும் சூழ்ந்திருக்க பந்தக்காலில் இறந்தவருடைய உடலைக் கிடத்தியிருந்த பாயை இறந்தவருடைய மகள் சுற்றி வைக்க வேண்டும். இதனையே நகரத்தார்கள் பச்சைகுத்தி பாய் சுருட்டுதல் என்ற சடங்காக நடத்தி வருகிறார்கள். இறந்தவருக்கு ஒரு மகளுக்கு மேல் மற்றொருவர் இருந்தால் இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் இருவரும் (மூத்தமகள் பச்சை குத்த அடுத்த மகள் பாய்சுருட்ட) செய்கிறார்கள். பிறகு பெண்கள் அனைவரும் தலைக்குக் குளித்து விடுகிறார்கள்.

இறந்தவர் ஆணாக இருப்பின் அவருடைய உடலைப் பந்தக்காலில் கிடத்தி இருக்கும்போது அவருடைய தலைப்பக்கம் அவருடைய மனைவி அமர்ந்திருப்பாள். அப்போது அவருடைய தாய்வீட்டிலிருந்து ஒரு தாம்பாளத்தில்ா வெண்பட்டு, மாலை, முதலியன வைத்து அவள் சகோதரர்கள் அவர்கள் வீட்டுப் பங்களாகிள் எல்லோரும் சேர்ந்து எடுத்துக் கொண்டு வருவார்கள். இறந்தவர் வாவரசியாக இருந்தால் அவர்களுடைய சகோதரர்கள், அவர்கள் வீட்டுப் பங்காளிகள் எல்லோரும் சேர்ந்து பட்டுச்சிலை, எண்ணெய், சீகைக்காய் முதலியவைகளை பெரிய பாத்திரங்களில் வைத்து எடுத்து வருவார்கள். இறந்தவரின் உடலைவிட்டு நிங்கி யஉயிர் புதுவாழ்க்கை தொடங்குகிறது

என்பதற்குப் புத்தாடையாகிய இந்தக் கோடியே அடையாளம். இதுவே தாய்வீட்டிலிருந்து வரும் "பிறந்த வீட்டுக் கோடி" என்று சொல்லுகிறார்கள்.

இறந்தவர் விதவையாக இருந்தால் அவளுக்குத் தாய் வீட்டிலிருந்து கோடி கொண்டு வரும் வழக்கம் இல்லை.

"மச்சின்மேல் பலகை

மஞ்சக் கரை முந்தாணி

மடிச்சுவந்து கோடிபோட நான்

மஞ்சள் இல்லப் பாவியானேன்"

என்று அந்தப் பெண் பாடுகின்ற ஒரு ஒப்பாரிப் பாடலே இதற்கு சான்றாக அமைகிறது.

சுடுகாட்டு நிகழ்ச்சிகள்

பொதுவாகவே சுடுகாடு ஊரின் தென்கிழக்குத் திசையில்தான் அமைந்திருக்கும். சிதையும் தெற்குவடக்காகவே அமைக்கப்பட்டிருக்கும்.

வடகிழக்கு	-	ஈசானிய மூலை
தென்கிழக்கு	-	உப்பு மூலை
தென்மேற்கு	-	கன்னி மூலை
வடமேற்கு	-	வாயு மூலை

என்று ஆன்றோர்கள் கூறுவார்கள். உப்பு மூலையில்தான் சுடுகாடு அமையவேண்டும் என்பது மரபு.

இறந்தவருடைய உடலைப் பாடையில் வைத்துச் சுடுகாட்டிற்கு முன்பெல்லாம் சுமந்தே வந்தார்கள். இப்போது பெரும்பாலான ஊர்களில் (இப்படிச் சுமந்து வருவதற்குத் தேவையான நபர்கள் கூடிவராத காரணத்தாலும், சுமையைத் தூக்கிக் கொண்டு நெடுந்தொலைவு நடந்துவரக்கூடிய இளைஞர்கள் மிகுதியாக (பங்காளிகளில் இல்லாததாலும்) சவ ஊர்திகள் செய்து வைத்துள்ளனர்.

சவ ஊர்தியிலிருந்து பங்காளிகள் இறந்தவருடைய உடலைத் தூக்கிக் கொண்டும் சிதையை மூன்று முறை வலம் வந்து சிதைக்குப் பக்கத்தில் வைத்து விடுகிறார்கள். நாவிதனைக் கொண்டு இறந்தவருடைய மூத்த மகனுக்குத் தலைவழித்துக் குளித்ததும் ஈர வேட்டியுடன் வரவேண்டும். இதற்குள் பிணம் எரிப்பவர் (மயானக் காவலன்) மற்றவர்களின் துணைக்கொண்டு இறந்தவரின் உடலைச் சிதை மீது வைத்து ஆடைகளைக் களைந்து கைக்கட்டை மட்டும் அவிழ்த்து கைகளைப் பின்புறமாக மடக்கி வைத்துக் கட்டி வரட்டி, குங்கிலியம் (இது விதவைகளுக்கு வைப்பதில்லை) சந்தனக் கட்டைகளைக் கொண்டு அடுக்கி களிமண்ணால் (முகம் மட்டும் கிழக்குப்பக்கம் தெரிவது போல் திருப்பி விட்டு மற்ற பகுதிகளை) பூசி வைத்திருப்பார். இதன் பின்னர் மகன், மற்ற உறவினர்களெல்லோரும் வரிசையாக வந்து இறந்தவரின் வாயில் வாய்க்கரிசியும் சொஞ்சம் சில்லரையும் போடுவார்கள். இறந்தவரின் வீட்டில் பச்சை குத்திய போது கிடைத்த அரிசிதான் இங்கு பயன்படுத்தப்படுகிறது. இப்படி எல்லோரும் வாய்ககரிசி

போட்ட பின் மயானக் காவலன் இறந்தவரின் முகத்தையும் வராட்டி கொண்டு மூடி களிமண்ணால் பூசி விடுவார். பிறகு இறந்தவரின் மூத்த மகனின் இடது தோளில் ஒரு பானையில் நிறைய தண்ணீர் எடுத்துக் கொண்டு சிதையை மூன்று முறை வலம் வரவேண்டும். ஒவ்வொரு முறையும் தலைப்பகுதிக்கு வரும்போது மயானக் காலவன் தன் கையில் வைத்திருக்கும் அரிவாளால் அந்தப் பானையில் ஒரு ஓட்டை போடுவார். நீர் வழிந்து கொண்டே இருக்கும் போது வலம் வரவேண்டும். இப்படி மூன்று முறை வலம் வந்ததும் அந்தப் பானையை மிச்சமுள்ள தண்ணீருடன் இறந்தவருடைய தலைப்பக்கம் கீழே போட்டு உடைத்து விடுகிறார்கள். இப்படி மூன்று முறை மண்பானையில் ஓட்டை போட்டு நீர்வடிவதை இறந்தவருக்கு மண், பெண், பொன் ஆகிய மூன்று ஆசைகளும் மறைந்துவிட்டன என்பதை காட்டுவதற்காகவே செய்யப்பெறுகிறது என்று ஆன்றோர்கள் கூறுகிறார்கள். மற்ற இனத்தவர்கள் இதனை நீர்க்குடம் உடைத்தல் என்று கூறுகிறார்கள். இப்படி அந்தப் பானையை உடைத்ததும் கொள்ளிச் சட்டியில் உள்ள தீயை எடுத்து இறந்தவரின் தலைப்பகுதியில் வைத்து தீமூட்ட வேண்டும். ஏற்கனவே மயானக் காவலன் தலைப்பகுதியில் நிறைய சூடம் வைத்திருப்பார் ஆகையால் தீ வைத்ததும் நன்கு எரிந்து கொழுந்து விட்டு எரியும். இப்படிக் கொள்ளி வைத்ததும் சிதையைத் திரும்பிப் பாராமல் வீட்டிற்குத் திரும்பி விடுவார்கள்.

சுடுகாட்டிலிருந்து திரும்பியதும், பந்தக்காலில் இறந்தவருடைய மனைவியை உட்கார வைத்து அவள் தாய்வீட்டுப் பங்காளிகள் சகோதரன் தோளில் வெண்பட்டை வைத்துக் கொண்டு 3 முறை சுற்றி வந்து அவளுடைய தலைமீது வைப்பார்கள். பிறகு அவள் குளித்து ஈரச்சேலையுடன் வந்து பந்தக்காலில் முக்காடிட்டு அமரவேண்டும். அவளுக்கு எதிரே ஒரு கிண்ணத்தில் பால் வைத்திருப்பார்கள். அதன் பக்கத்தில் நிறை நாழியும் வைத்திருப்பார்கள். பின்னர் ஆண்கள் எல்லோரும் முன்பகுதிக்குச் சென்று விடுகிறார்கள். யாராவது இரண்டு விதவைகள் அவளுடைய தாலியைக் கழற்றி எதிரே உள்ள பால்கிண்ணத்தில் போட்டு விடுவார்கள். (நகரத்தார் இதனை தாலி வாங்குதல் என்று கூறுகிறார்கள்) மறுபடி அவள் குளித்து வெள்ளைச் சேலை உடுத்தி திருவிளக்குக்குப் பக்கத்தில்

வந்து அமர்ந்ததும் கொள்ளி வைத்த மூத்த பையனும் மற்ற சகோதரர்களும், நிலைப்படி அருகே போட்டு வைத்துள்ள உலக்கையைத் தாண்டி வீட்டிற்கு உள்ளே வந்து, தாயை வணங்கி விபூதி பெற்றுக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு டம்ளர் மோரில் வேப்பிலை அரைத்து அதன் சாறு கலந்து கொஞ்சம் சாப்பிட வேண்டும். இப்படி மோரும் வேப்பஞ்சாறும் சாப்பிட்டு விட்டால் அன்றைய இறப்புத் தீட்டு தீர்ந்துவிட்டது என்று நகரத்தார்கள் கருதுகிறார்கள்.

தாலி வாங்கியபின் அந்தப் பெண் குளிக்கச் சென்றவுடன் இந்தப் பந்தல்காலை நான்கு பங்காளிகள் அந்தக் களிமண் உருண்டையிலிருந்து பிரித்து எடுத்து, வீதிக்குக் கொண்டு சென்று பந்தல்கால்களை முறித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு வந்து நால்வரும் ஆளுக்குக் கொஞ்சம் மோர் சாப்பிடுகிறார்கள். பந்தல்கால் ஊன்றியதிலிருந்து அதைப்பிரித்து எடுத்து முறித்துக் குப்பைத் தொட்டியில்போடும் வரை அந்தப் பந்தல் கால்களுக்குள் வேறு எவரும் செல்லக்கூடாது.

இந்தப் பந்தக்கால்கள் நாவல் மரக்குச்சிகளால் தயார் செய்வதும் அதன் மேலே நாவல் இலைகளைப் பரப்பி வைப்பதும் பந்தல் கால்களைப் பிரித்து எடுத்ததும் மோர் சாப்பிடும் நிகழ்ச்சிகள் இன்னும் ஆய்வுக்குரியன.

இந்தத் தாலி வாங்கும் நிகழ்ச்சியின் போது இறந்தவருடைய பங்காளிகள் பந்தல் காலைச் சுற்றிவருவது இல்லை. இறந்தவர்க மனைவியின் தாய்வீட்டுப் பங்காளிகள் மட்டுமே சுற்றிவர வேண்டும்.

இத்துடன் பெரும்பாலும் இறந்தவர்வீட்டு அன்றைய நிகழ்ச்சிகள் முடிவுக்கு வந்து விடுகின்றன.

நம்பிக்கைகளும் நடைமுறைகளும்

ஒருவரின் சாவை ஊர்மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டே கொட்டு, தப்பு, சங்கு, சேகண்டி முதலியன பயன்படுத்தப் பெறுகின்றன.

இறந்தவரின் உடலை எரிப்பதை நகரத்தார்கள் பெரும்பாலும் குளிகை காலத்தில் செய்வதில்லை. தவிர்க்க முடியாத நேரங்களில் வேறு நேரங்களில் செய்தாலும் இரவு பதினோறு மணிக்குமேலும் காலை 5 மணிக்குள்ளும் எரிப்பதை இவர்கள் சமூகத்தில் காணமுடியாது.

அவிட்டம் முதல் ரேவதி நட்சத்திரம் வரை உள்ள நாட்களில் ஒருவர் இறந்தால் அவர்களைப் பாதத்தில் இறந்தவர்கள் என்று கூறுகிறார்கள். இதனால் எஞ்சியுள்ளவர்களுக்கு (இறந்தவரின் குடும்பத்தில்) கெடுதல்கள் ஏதேனும் நேரலாம் என்பது நகரத்தார்களின் நம்பிக்கை இதற்குப் புரோகிதர்களைக் கொண்டு பரிகாரமும் செய்து கொள்வது உண்டு.

சனிக்கிழமையன்று ஒருவர் இறந்தாலும் அல்லது அன்று சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றாலும் விரைவில் அந்தக் குடும்பத்தில் வேறு ஒரு சாவு ஏற்படும் என்று நம்புவதால் இறந்தவரின் உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும்போது அந்தப் பாடையில் ஒரு கோழிக்குஞ்சும் ஒரு தேங்காயையும் இறந்தவருடைய தலைமாட்டில் கட்டி எடுத்துச் செல்கிறார்கள். "சனிப் பிணம் தனிப் போகாது" என்ற பழமொழியை இவர்கள் பெரிதும் நம்புவதாலேயே இத்தகைய வழக்கத்தைக் கைக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தணர்களுக்கு பனிரெண்டு நாள்களும், சத்திரியர்களுக்கு பதினோறு நாட்களும் வைசியர்களுக்கு 14 நாட்களும் மைற்றவர்களுக்கு ஒரு மாத காலமும் துக்கம் அனுட்டிக்கப்படவேண்டும் என்று முன்னோர்கள் வகுத்து இருக்கிறார்கள்.

சிலப்பதிகாரத்தில்

"பூத்த வேங்கையிப் பொங்கற் கீழோர்
தீத்தொழி வாட்டியேன் யான் என்று ஏங்கி
ஏழுநாள் இரட்டி எல்லை சென்றபின்"

என்று வரும் வரிகளால் நகரத்தார்களும் கண்ணகியின் துக்க மரபைப் பின்பற்றி வந்திருக்கிறார்கள் என்று அறியமுடிகிறது. ஒருவர் இறந்த தினத்திற்கு மறுநாள் முதல் பதிநான்கு நாட்கள் துக்கம் கொண்டாடி பதினாறாவது நாள் சவண்டி கொடுத்து துக்கத்தை முடித்துக் கொள்வது நகரத்தார்களின் பழக்கமாக இருந்துவந்திருக்கின்றது. ஆனால் இன்று காலத்தின் சூழ்நிலை கருதியும், பலரும் அவரவர்கள் தொழில் நிமித்தம் வெளியூர் செல்லவேண்டிய கட்டாயத்தையும் மனதில் கொண்டு 5,7,11 நாட்களில் சவண்டியை நடத்தித் துக்கத்தை முடித்துக் கொள்கிறார்கள்.

சுடுவோர், இடுவோர், தொடுகுழிப் படுப்போர், தாழ்வையினடைப்போர், தாழியில் கவிழ்ப்போர் என மணிமேகலைப் பாடல்கள் மூலம் ஐந்துவகையான அடக்கங்களின் விளக்கங்கள் இருந்தபோதும் நகரத்தார்கள் இறந்தவரின் உடலை எரிப்பதையே வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

திரு. பி. வி. ஜெகதீச ஐயர் அவர்கள் எழுதி 1982-ம் ஆண்டு புதுதில்லி ஏஷியன் எஜூகேஷனல் சர்விஸஸ் என்ற நிறுவனத்தில் வெளியிட்டுள்ள "SOUTH INDIAN CUSTOMS" என்ற நூலில் இறந்தவருடைய உடலை எரிப்பதைப் பற்றிய அவருடைய கருத்துகளாவன

"CREMATIONS OF CORPSES"

The best way of disposing of the Corpse is said one by cremation and the reasons for this are :

1. It avoids rotting of the corpse, which pollutes percolating water reaching wells and endangering human safety by breeding dangerous microbes,
2. Rites for the dead enjoined in the Hindu Sastras or Rituals for the dead requires the cremation of the corpse. If corpses are not burnt, they say that the tenants of these corpses could not reach the super-physical world where the rites performed for the dead could benefit them.

இதிலிருந்து இறந்தவரின் உடலைப் புதைப்பதை விட எரிப்பதே சிறந்தது என்று நகரத்தார்கள் கருதி வந்திருப்பதை இவர்கள் ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள முடியும்.

சுடுகாட்டில் உலவும் பேய்கள் பெண்களைப் பற்றிக் கொள்ளக்கூடும் என்ற அச்ச உணர்வாலும் இறந்தவரின் உடலைப் நெருப்பிலிடும் காட்சியைப் பெண்கள் பார்த்துத் தாங்கிக் கொள்ளும் சக்தியற்றவர்கள் என்பதாலும் பெண்கள் சுடுகாட்டிற்கு வருவதை நகரத்தார்கள் வழக்கமாகக் கொள்ளவில்லை, ஆனால் இன்றைய நாட்களில் காலத்தின் சூழ்நிலை கருதியும், பல வேறு காரணங்களாலும் பெண் மக்களே இறந்தவரின் உடலுக்குத் தீயிடும் பழக்கத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இறந்தவரின் உடலை புனித நீரால் நீராட்டினால் நல்லுலகம் செல்வார் என்று நகரத்தார்கள் பெரிதும் நம்புவதாலேயே இறந்தவரின் உடலைக் குளிப்பாட்டும்போது காசித் தீர்த்தத்தையும் அந்தத் தண்ணீரில் கலந்து கொள்கிறார்கள்.

இறந்தவரின் மூத்தபையன் இறந்தவருக்குக் கொள்ளிவைக்கும் மரபு இலக்கியத்தில் கூறப்படுவது போல் இன்றும் நகரத்தார்கள் கடைப்பிடித்து வருகிறார்கள்.

ஒருவர் இறந்துபோன நாள் நல்ல நாளாக இருக்கவேண்டும் என எதிர்பார்பபது நகரத்தார்களின் இயல்பு. திருவாதிரை, ஏகாதசி, முதலிய நாட்களில் உயிர் பிரிவதை ஒரு பெரும் பேறாகக் கருதுகிறார்கள், ஊரில் திருவிழா முதலிய விழாக்கள் நடந்து கொண்டிருக்கும்போது ஒருவர் இறந்துவிட்டால் அந்த வீட்டில் பறைக்கொட்டு, சேகண்டி முதலியன பயன்படுத்தமாட்டார்கள் ஆதலால் "அவருக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என்று கூறுகிறார்கள்.

ஒருவர் வீட்டில் நடக்கும் திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளுக்கு மற்றவர்கள் வந்து கலந்து கொள்ளாவிட்டாலும் இறந்த வீட்டுக்குச் சென்று துக்கம் விசாரிப்பதை நகரத்தார் மக்கள் மிக முக்கிய சமூகக் கடமையாகக் கருதுகிறார்கள்.

சிறு குழந்தைகள் பிறந்தவுடனோ அல்லது 45 வயது வந்த பிறகோ இறந்துவிட நேரிட்டால் நகரத்தார்கள் அந்தக் குழந்தையைக் குளிப்பாட்டி நல்ல உடை அணிவித்து, ஒரு மூங்கில் கொம்பில் தொட்டில் கட்டி அதனை எடுத்துச் சென்று சுடுகாட்டுக்குப் பக்கத்தில் குழிவெட்டிப் புதைத்துவிடும் நடைமுறையைக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குழந்தை தலைப்பிள்ளையாக இருந்தால், குழிக்குள் புதைக்கப்படுவதற்கு

முன்பு குழந்தையின் தகப்பனார் குழந்தையை கையில் சுமந்து கொண்டு "மடிப்பிள்ளை குழிப்பிள்ளை - குழிப்பிள்ளை மடிப்பிள்ளை" என்று சொல்லிக் குழிக்குள் வைக்கிறார்கள். இநதக் குழந்தை இறந்து குழிக்குள் சென்றாலும் மீண்டும் என் மடிப்பிள்ளையாகப் பிறக்கவேண்டும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இப்படிப் புதைக்கிறார்கள்.

வயதுக்கு வந்த ஆண், பெண் இருவரில் யாரேனும் திருமணம் ஆவதற்கு முன்பு இறந்துவிட்டால், இறந்தவரின் உடலைக் குளிப்பாட்டி, பாடை தயாரித்து அதில் கிடத்தித் தூக்கிக்கொண்டு சுடுகாடு செல்லவேண்டும். அங்கு மயானக்காவலன் சிதையில் வைத்து, வராட்டி அடுக்கி, களிமண்ணால் பூசி தலைப்பகுதியில் சூடம் நிறைய வைத்துவிடுவான் இறந்தவரின் தந்தை (தந்தை இல்லாவிடில்) அல்லது சகோதரர்களில் ஒருவர் அந்தச் சூடத்தில் தீ வைத்துவிட்டு வரவேண்டும். இத்தகைய இறப்புக்கு கொள்ளிச்சட்டி, கொட்டு, தப்பு, சேகண்டி முதலியன இல்லை என்றும். பின்பு 5,7 வது நாட்களில் ஒரு புரோகிதரைக் கொண்டு வீட்டிற்குப் புண்ணியாவாசனம் செய்து கொள்வது என்பதை நகரத்தார்கள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள் இப்படிக் கர்ப்பூரத்தில் தீ வைப்பதால் இதனைக் கற்பூரக் கொள்ளி என்று கூறுகிறார்கள்.

நகரத்தார்களில் சிலபேர் சிவபூஜை எடுத்தவர்களும் உண்டு. அவர்களில் யாரேனும் காலமாகிவிட்டால், அவர்கள் வழக்கப்படி எவ்விதக் கிரியைகளும் செய்வதில்லை. மாறாக மைற்ற சிவபூஜை எடுத்தவர்களில் சிலர் வந்து சிவாகம நெறிப்படி இறந்தவருடைய உடலைப் பன்னீர், இளனீர், பால், பழங்கள், காசித் தீர்த்தம் முதலியவைகளால் அபிஷேகம் செய்து தீபாராதனை காட்டி அவர்களுடைய முறைப்படி சில பூசைகள் செய்து பாடையில் இறந்தவரை உட்கார்ந்த நிலையில் வைத்து தூக்கிச் சென்று இடுகாட்டில் ஒரு குழிவெட்டி அதில் நிறைய உப்பு மூட்டைகளும் விபூதியும் (இப்படிச் செய்வதால் இறந்தவருடைய உடலை பூச்சி புழுக்கள் எந்தவிதச் சேதமும் செய்யாது) போட்டுப் புதைத்து சமாதி கட்டி விடுகிறார்கள். இவர்கள் காலமான வீட்டில் பறைக்கொட்டு, சேகண்டி முதலியன ஒலிப்பதில்லை. பெண்களும், அழுது ஒப்பாரி வைப்பதுமில்லை. இறந்தவருடைய மகன்கள் எத்தனைபேர்

இருந்தாலும் அத்தனை பேரும் தலை வழித்துக்கொள்கிறார்கள் ஆண்டுதோறும் இறந்தவருடைய திதியன்று, உறவினர்கள் எல்லோரும் சமாதிக்குச் சென்று படையல் வைத்துக் குருபூசை செய்கிறார்கள்

பிற சடங்குகள்

காடேத்தல் (காடு ஆற்றுதல்)

இந்தச் சடங்கு, ஒருவர் இறந்து அவரை எரியூட்டிய மறுநாள் செய்யக்கூடிய ஒன்றாகும். பொதுவாக மற்ற இனத்தவர்கள் இதனைப் பால் தெளித்தல் என்று கூறுகிறார்கள்.

ஈமச்சடங்கு எரித்த செய்கையால் உண்டான சாம்பலில் உள்ள வெப்பத்தினை நீர் தெளித்து ஆற்றுப்படுத்துதலே இதன் நோக்கம்

இறந்தவருடைய மகன், மறுநாள் காலை பங்காளிகளில் ஒருவருடன் பால், தண்ணீர், இளநீர், பன்னீர் முதலியவைகளை எடுத்துக் கொண்டு சுடுகாட்டிற்குச் சென்று, மயானக் காவலன் துணையுடன் இறந்தவரை எரித்த இடத்தில் உள்ள சாம்பலின் மீது (சில சமயங்களில் நீறு பூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருக்கும்) தண்ணீர், பன்னீர், இளநீர், பால் முதலியவைகளைத் தெளித்து அதன் வெப்பத்தைக் குறைத்துவிட்டு, ஐந்து இடங்களில் உள்ள எலும்புத் துண்டுகளையும் சாம்பலுடன் சேர்த்து எடுத்துக் கொண்டு (இதுதான் அஸ்தி என்பது) ஒரு தகர டப்பாவில் வைத்து, வீட்டுக்கு வந்து பின்புறம் உள்ள மரத்தடியில் புதைத்து வைப்பார்கள். பின்னர் ஒரு நாள் இதை எடுத்துக் கொண்டு ஆற்றிலோ, கடலிலோ கரைத்துவிடுவார்கள். இப்போது பெரும்பாலும் அன்றே தபால் மூலம் காசிக்கு அனுப்பியோ அல்லது பக்கதில் இங்கே உள்ள ஆறு அல்லது கடலில் கரைத்து விடுகிறார்கள். இப்படிச் செய்வதினால் இறந்தவருடைய ஆன்மா சாந்தியடைவதாக கருதுகிறார்கள். இந்தக் காடாற்றும் நிகழ்ச்சியை நகரத்தார்கள் சொல்வழக்கில் காடேத்தல் என்று குறிப்பிடுகிறார்கள். இறந்தவர்களுடைய ஆன்மா மோட்சம் அடையவேண்டும் என்ற நம்பிக்கையில் ஒருவர் இறந்த அன்று தந்தி மூலம் தகவல் சொல்லி காசி, சிதம்பரம், திருவண்ணாமலை ஆகிய ஏதாவது ஒரு ஊரில் மோட்ச தீபம் போட ஏற்பாடு செய்கிறார்கள். இதற்குரிய கட்டணத்தையும் பின்னர் அஞ்சல் வழி அனுப்பிவைக்ககிறார்கள். இவர்களுடைய தகவல் கிடைத்ததும் கோயில் நிர்வாகிகள் கோபுரத்தில் ஒரு அகல் விளக்கேற்றி வைத்துவிடுகிறார்கள். இந்த வெளிச்சத்தின்

துணைக் கொண்டு இறந்தவரின் ஆன்மா மோட்சத்திற்குச் செல்வதாக நகரத்தார்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

கல்லெடுத்துப் புலால் ஊற்றுதல்

இதனை வேறு இனத்தவர்கள் கருமாதி என்று கூறுகிறார்கள். கருமம் ஆதி என்ற இருசொற்களும் சேர்ந்து கருமாதி ஆயிற்று. முன்பு இறந்தவர் நினைவாக எரித்த இடத்தின் அருகாமையில் ஒரு சிறு கல்லை நட்டுவைத்து அதில் அவர் பெயர், பிறந்த நாள், இறந்த நாள், அவருடைய பெருமை முதலியவற்றைக் குறித்து பலருடைய பார்வைக்கும் தெரியும் வண்ணம் அமைத்து வந்தனர். இது இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் நிகழ்ச்சியாக அமைந்திருக்கவேண்டும். பொதுவாக இறந்த வீட்டில் தனித்திருந்தும், துக்கத்தினாலும் ஏற்படுகின்ற உடல் சூட்டைச் ஆற்றிக் கொள்ளவே புலால் உண்ணும் நிகழ்ச்சி நடைபெற்று வந்திருக்கின்றது. இன்று நகரத்தார் சமூகத்தில் இந்தக் கல்லெடுத்தல் நிகழ்ச்சி நடைபெறுவதாகத் தெரியவில்லை. புலால் உண்ணும் நிகழ்ச்சியும் அன்று உறவினர்கள் எல்லோரையும் அழைத்துச் சைவ உணவாகவே . படைத்து கொண்டாடுகிறார்கள் காலப்போக்கில் இவைகள் நடைபெறாவிட்டாலும் கல்லெடுத்துப் புலால் உண்ணும் நிகழ்ச்சியை மட்டும் விட்டுவிடாமல் சைவ உணவுமட்டும் பரிமாறிக் கொண்டாடப் பெறுகிறது.

கழித்தல்

இந்த நிகழ்ச்சி துக்கம் கொண்டாடுகிற நாட்களின் கடைசிநாளில் நடைபெறுகிற ஒரு சடங்காகும். இந்தக் கழிக்கும் சடங்கு, இறந்தவர் பஞ்சாட்.சர உ்பதேசம் கேட்டிருந்தால் ஊருணிக் கரையிலும் இல்லையெனில் வீட்டில் உள்ள நீர்த்தாரை ஒன்றில் நிகழ்த்தப்பெறும். இந்த, சடங்கு நாவிதனையும், புரோகிதரையும் வைத்துச் செய்யப்படுகிறது. மூன்று சிறு கற்களை எடுத்து இறந்தவர், அவரது தகப்பனார், அவரது தகப்பனார் (அதாவது இறந்தவரின் பாட்டனார்) என்பதாகப் பாவித்து அவர்களுக்குப் பூசை செய்வதாகக் கொள்ளப்படுகிறது. இந்தச் சடங்கு செய்யும்போது ஊருணிக்கு செல்லும்போது கரித்தூள், செங்கல்தூள், மஞ்சள் தூள் மூன்றிலும் கொஞ்சம் ஒரு

தட்டில் திருநீறு, சந்தனம், தாம்பாளம், ஒரு குடம் பால், தயிர், இளநீர், தேன், இரண்டு செம்புகள், மஞ்சள் தூள், குங்குமம், மாவிலை, தேங்காய் வாழைப்பழம், சூடம், சாம்பிராணி, குத்துவிளக்கு, உதிரிப்பூக்கள், வெற்றிலை பாக்கு, சமித்துகள், நெய், வாழை இலை, பச்சரிசி, முதலியன எடுத்துச் செல்ல வேண்டும். இந்த மூன்று கற்களையும் நாவிதனே கொண்டுவந்து கொடுப்பான். இநத கற்களை ஒரு தாம்பாளத்தில் வைத்து, இறந்தவர் ஆணாக இருந்தால் அவர், அவர் தகப்பனார், அவர் பாட்டனார் முதலியவர்களாகப் பாவித்து (இறந்தவர் பெண்ணாக இருந்தால் அவர், அவர் மாமியார், அவரது மாமியார்) செய்யவேண்டும். நடுவில் இருக்கும் கல் இறந்தவரைக் குறிக்கும். பால், தயிர், இளநீர், தேன், எண்ணெய் முதலிய பொருள்களைக் கொண்டு அந்தக் கற்களுக்கு அபிஷேகம் செய்து திருநீறு பூசி, பொட்டு வைத்து, சந்தனம் பூசி (பெண்ணாக இருந்தால் மஞ்சளும், விதவையாக இருந்தால் வெறும் திருநீறு மட்டும்) இதற்கென நாவிதனால் பச்சை தென்னை ஓலையில் முடைந்து, மடக்கிச் சிறு பந்தலின் கீழ் வைத்து, வாழை இலை வைத்து நாவிதனால் பொங்கிவைக்கப்பட்டுள்ள சோற்றில் பதினாறு உருண்டைகள் செய்து வைத்து, பழங்களையும் வைத்துப் படைத்து கருமம் செய்தவன் தீபம் காட்டி வணங்கவேண்டும் பிறகு இந்த வாழை இலையையும் கற்கள் வைத்திருக்கும் தாம்பாளத்தில் வைத்து, கருமம் செய்தவன் அதனைத் தூக்கிக் கொண்டு போய் குளத்தில் விட்டுவிட்டு மூன்று தூள்களையும் ஊருணியில கரைத்துவிட்டு அதில் குளித்து வரவேண்டும். இதன் பின்னர் புரோகிதர் ஒருவர் மூலம் பச்சரிசியில் வாழைப்பழம், தேன் விட்டுப் பிசைந்து பிண்ட வழிபாடு செய்யவேண்டும். இந்தச் சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. இதனால் இறந்தவரை அவரது முன்னோர்களில் (முப்பாட்டனாரை விலக்கி விட்டு) இணைத்துக் கொண்டு பிண்டம் வாங்கிக் கொள்வதாக ஐதீகம் என்று நம்பப்படுகிறது. இப்படி குளத்தங்கரையில் கழித்தல் நடந்து கொண்டிருக்கும்போது வீட்டில் இறந்தவருடைய மனைவிக்கு எதிரில் பாய்விரிந்து அதில் ஒரு ஓலைப்பெட்டியில் (கடகாம்) பச்சரிசி நிறைத்து வைத்திருப்பார்கள் பிறகு இறந்தவரின் மனைவியின் தாய் வீட்டிலிருந்தும் இறந்தவருடைய சம்பந்தப் புரங்களிலிருந்தும் (மகன், மகள் முதலியவர்களின் மாமனார்கள் அல்லது

அவர்களுடைய மகன்கள்) வந்து அந்த அரிசிக் கடகத்தின் மீது கொஞ்சம் பணம் வைத்துவிட்டு செல்வார்கள். இதனை நகரத்தார்கள் அரிசிக்கு வைத்தல் என்று கூறுகிறார்கள். இறந்தவருடைய மகன் குளத்தங்கரையிலிருந்து வந்ததும் ஆண்கள் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து (கருமம் செய்தவன் முதல் இலையில் அமரவேண்டும்) தண்டல்காரன் சங்கு ஊதி, சேகண்டி அடித்தும் எல்லோரும் உணவருந்துவார்கள். இப்போது அத்தகைய தண்டல்காரர்கள் கிடைக்காத காரணத்தால் இந்தச் சங்கு ஊதும் நிகழ்ச்சியை மட்டும் கைவிட்டுவிட்டனர்.

சவண்டி

சபண்டீகரம் என்ற வடமொழிச் சொல்லின் திரிபே சவண்டி என உருமாறியிருக்கிறது. இந்தச் சொல்லுக்கு இறந்தவரின் ஆன்மாவை பிண்டங்கள் மூலம் அவருடைய முன்னோர்களுடன் சேர்த்துவிட்டதாக பொருள் கொள்கின்றனர். நகரத்தார்களிடையே இந்தச் சவண்டி முன்காலத்தில் ஒருவர் இறந்த பதினாறாம் நாளில்தான் கொடுத்து வந்தார்கள். காலத்தின் சூழ்நிலை கருதி இப்போது அவரவர்கள் சௌகரியத்திற்காகவும், நாள் தோதிற்காகவும் 5, 7, 11 ம் நாள்களில் கொடுத்து வருகிறார்கள். இந்தச் சவண்டி என்ற சடங்கு முடிந்துவிட்டால் இறந்தவருடைய மகன், மகள், உற்றார், உறவினர் அனைவருடைய தீட்டும் கழிந்துவிடுவதாக நம்பப்படுகிறது.

இந்தச் சவண்டியன்று புரோகிதர் ஒருவர் மூலம் இறந்தவருடைய மகன் சங்கல்ப்பம் செய்து கொண்டு புண்ணியாவாசனம் செய்யவேண்டும். பிறகு விநாயகர் பூசை லெட்சுமி பூஜை, இறந்தவர் தகப்பனாராக இருந்தால் பிதுர்கும்ப பூஜையும், இறந்தவர் தாயாராக இருந்தால் மாதுர் கும்ப பூஜையும் செய்யவேண்டும். கிழக்கிற்கு இந்திரனும், தெற்கிற்கு தர்மராஜாவும், மேற்கிற்கு வருணனும் வடக்கிற்கு குபேரேனும் தெய்வங்களாகும். 4 புரோகிதர்களை வைத்து இந்திரனுக்கு வஸ்திரமும், தர்மாராஜா, வருணன் இருவருக்கும் செம்பும், குபேரனுக்குத் தங்கமும் தானமாகக் கொடுக்கவேண்டும். ஒரு பசுங்கன்றைக் கோயிலுக்குத் தானமாகக் கொடுக்கவேண்டும். இவ்வாறு கொடுப்பதால் இறந்தவர்க்கு பிரேத தோஷமும்

பைசாச தோஷமும் நிவர்த்தி ஆகிறது என்று நம்பப்படுகிறது. மேலும் இந்த தானங்கள் கொடுப்பதின் மூலம் இறந்தவருடைய ஆன்மா புண்ணிய லோகம் செல்வதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன என்று புரோகிதர்கள் சொல்கிறார்கள். இதன் பிறகு ஒரு இலை போட்டு பச்சரிசி, காய்கறிகளை நிரப்பி ஒரு புரோகிதரை உட்காரவைத்து, அவருக்கு எதிரே ஒரு வேட்டியால் திரைபோலப் பிடித்துக் கொண்டு அவருக்குத் தெத்தம் செய்து கொடுக்கவேண்டும். இதனை புரோகிதர்கள் ஏகோதிஷ்டம் என்று சொல்கிறார்கள். இதன் பிறகு 15 வாழை இலைகள் போட்டு அதில் பச்சரிசி, காய்கறிகள் வைத்து பதினைந்து புரோகிதர்களை உட்கார வைத்து ஒவ்வொருவருக்கும் ரோக்கமும் தானமாகக் கொடுக்கவேண்டும். இந்த நிகழ்ச்சியை மாசியம் என்று சொல்கிறார்கள். பதினோரு மாதங்களுக்கு பதினோரு இலையும் 27, 45, 60 மாசியங்களும் 3 இலைகளும் ஆஸ்திக மாசியம் ஒன்றுக்கு ஒரு இலையும் ஆக பதினைந்து இலைகள் என்பது புரோகிதர்களின் கணக்கு. இதற்குப் பிறகு நவக்கிரஹ ஹோமம் வளர்த்துப் பூஜை செய்து பூர்ண ஆகுதி செய்து வழிபடவேண்டும். இதன் பிறகு விஸ்வ தேவர், மாதா பிதாக்கள், மகா விஷ்ணு ஆகிய நால்வருக்கும் முன் சொல்லியது போலவே வாழை இலைபோட்டு காய்கறிகள், பச்சரிசி முதலியவைகளை வைத்து நான்கு பூரோகிதர்களுக்கு ரொக்கத்துடன் தானமாகக் கொடுக்கவேண்டும். இந்த நிகழ்ச்சிகள் முடிந்தபிறகு பிண்டப்பிராதனம் என்ற நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் தசதானம், ஷ்ட தானம் மகாதானம் ஆக 19 தானங்கள், உப்பு, வெல்லம், நெய், தங்கம், வெள்ளி, பாய்தலையணை (சாயாதானம்) சந்தனக்கட்டை, போர்வை, குடை, மணை, விசிறி, உருத்திராட்ச மாலை, தீபக்கால், மணி, புத்தகம், நெல், எள், பசு, நிலம் என்ற 19 பொருள்களை வைத்துக் கொடுக்கவேண்டும். பத்தொன்பது பிராமணர்களுக்கு பத்தொன்பது விதமாக பொருள்களும் ரொக்கமும் வேட்டி, துண்டும் வைத்துக் கொடுத்துத் தானம் செய்யவேண்டும் இதன்பிறகு பசு தானம், யாத்திரா தானம் முதலிய தானங்களையும் செய்யவேண்டும். இதன் பிறகு மறுபடி புண்யாவாசனம் செய்து நான்கு தலைமுறை முன்னோர்களுக்கும் புண்ணியலோகத்தில் ஆன்மா நிலைபெற வேண்டுபென்பதற்காக சோத கும்பம் என்ற நிகழ்ச்சியும் நடத்தவேண்டும். பிண்டப்பிரதான நிகழ்ச்சி என்பது பச்சரிசியில் வாழைப்பழம், தேன் விட்டுப் பிசைந்து ஆறு

உருண்டைகளாக உருட்டி ஒரு தாம்பாளத்தில் தர்ப்பைப் புல்லை வைத்து இறந்தவர் பெயர், அவரது தகப்பனார் பெயர், அவருடைய தகப்பனார் பெயர் மூன்றையும் சொல்லி (உயிருடன் இருப்பவர்கள் பெயர்களைச் சொல்ல வேண்டியதில்லை) இடது கையை ஊன்றிக் கொண்டு, வலது கையில் ஒவ்வொரு பிண்ட உருண்டையையும் எடுத்து இடது கைக்குப் பின்புறமாக வலதுகையை கொண்டுபோய் தர்ப்பப் புல்லின் மேல் வைக்கவேண்டும், இதேபோல் தாயார் பெயர், பாட்டி பெயர், முப்பாட்டி பெயர் மூன்றையும் சொல்லி பிண்ட உருண்டைகளை வைக்கவேண்டும். அதன் பின்னர் வலது கையில் எள்ளை எடுத்துக்கொண்டு, சவண்டி கொடுப்பவரின் மணைவி நீர்வார்க்க அந்தப் பிண்டங்களின் மீது விட்டு (ஆறு முறை ஆறு பெயர்களையும் சொல்லி) வணங்கிய பிறகு இந்த பிண்டங்களை அப்படியே எடுத்துக்கொண்டு போய் குளத்தில் விட்டு வரவேண்டும். இதை சவண்டி கொடுக்கும் உறவினர் வீட்டுப் பையன்களை கொண்டுபோய் விட்டுவிட்டு வரலாம். இதன்பிறகு புரோகிதர்கள் எல்லோரும் அமர்ந்திருக்கும்போது கடைசியாகப் புண்ணியாவாசனம் செய்வதற்கு வளர்த்த ஹோம குண்டத்தை சவண்டி கொடுத்தவர் முன்னே செல்ல இறந்தவருடைய உறவினர்கள் எல்லோரும் மூன்று முறை வலம் வந்து தலைமைப் புரோகிதரிடம். அட்சதை வாங்கிக் கொள்ளவேண்டும். இதேபோல இறந்தவர் வீட்டில் உள்ள பெரியவரிடம் ஆசிபெற்று அட்சதை வாங்கிக் கொள்ளவேண்டும். சவண்டி கொடுப்பதற்கு முன்பு பட்டகசாலையில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் திருவிளக்குக்கு முன் புரோகிதர் தருகின்ற தேங்காய் பழங்களை வைத்து வணங்கவேண்டும். இத்துடன் சவண்டிச் சடங்குகள் முடிவிற்கு வருகின்றன. உற்றார் உறவினருக்கு மதியம் விருந்து அளித்தபின் இறந்தவருடைய மகள்களுக்கு காய்கறி, பழம் முதலியவைகளும் கணிசமான தொகையும் கொடுத்து அவர்கள் வீட்டிற்கு அனுப்பிவைப்பார்கள். இது தங்களுக்குத் தாய்வீட்டிலிருந்து இறந்தவருடைய கடைசிச் சீராக நம்பப்படுகிறது. இப்படிச் சவண்டி கொடுத்த பிறகு அன்று இரவு சவண்டி கொடுத்த இடத்தில் திருவிளக்கேற்றி எல்லோரும் வழிபடுகிறார்கள்

காய்ச்சி ஊற்றுதல்

ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட இறப்பு நிகழ்ச்சிக்கு ஆறுதல் கூறி விருந்து வைத்து அவர்களை ஆற்றுப்படுத்துதலே இதன் உட்கருத்து. இறந்தவரின் மக்கள் அவரவர் மாமனார் இல்லங்களுக்கும் ஆயாள் வீட்டிற்கும் சென்று இப்படிக் காய்ச்சி ஊற்றிக் கொண்டுவிட்டால் ஒரு வீட்டில் ஏற்பட்ட துக்க நிகழ்வுகள் முடிவிற்கு வந்துவிட்டன என்று கருதப்படுகிறது.

மறுதாட்டு

சவண்டி கொடுத்த அன்று அவரவர்கள் வீடுகளுக்குச் சென்ற இறந்தவரின் பெண் குழந்தைகள் ஓரிரு நாள்கள் கழித்து பழம் காய்கறி, தின்பண்டங்கள் (முறுக்கு, அதிரசம் போன்றவை) எடுத்துக் கொண்டு தாய் வீட்டிற்கு வந்து இறந்தவருடைய உறவினர்களுக்கு ஆறுதல் கூறுவார்கள். ஒருவர் இறந்த அன்று பல நிகழ்வுகள் நடைபெறுவதாலும் ஒவ்வொருவரும் துக்கத்தில் ஆழ்ந்திருப்பதாலும் ஒருவரை ஒருவர் சந்தித்து இறந்தவருடைய அருமை பெருமைகளைப் பேசிப் பகிர்ந்து கொள்ள முடியாத சூழ்நிலையில் இருப்பதால் துக்கநிகழ்ச்சிகள் முடிந்த ஓரிரு தினங்களில் மீண்டும் வந்து இப்படி எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சியே மறுதாட்டு என நகரத்தார்கள் சொல்கிறார்கள்.

பொதுவாக நகரத்தார் வீடுகளில் நடைபெறும் இறப்புச் சடங்குகளில் எந்தவிதமான பெரும் மாற்றமும் இல்லை எனினும் சிற்சில வட்டகைகளில் சிறிய சில மாற்றங்களுடன் அவரவர்கள் வழக்கங்களைப் பொறுத்து நடத்தி வருகிறார்கள்.

தலைத்திதி (அ) தலைத் திவசம்.

ஒருவர் எந்த மாதம் எந்தத் திதியில் இறக்கின்றாறோ அடுத்த ஆண்டு அதே மாதம் அதே திதியில் இந்த முதல் திவசம் கொடுக்கப் பெறும். இந்தத் திவசத்திலும் பூரோகிதரை வைத்து இறந்தவருடைய மகன், விநாயகர் பூசை செய்து (அனுக்ஞை) புண்ணியா வாசனம், மாதுர் கும்ப பூஜை, லெக்ஷ்மி பூஜை முதுலியன செய்து சவண்டியன்று செய்தது போல இலைகள் போட்டு; அரிசி காய்கறிகள் நிரப்பி ரொக்கத்துடன் புரோகிதர்களுக்குத் தானம் செய்து, ஹோமம் வளர்த்து, பிண்டப்

பிரதானம் செய்து, ஹோம குண்டத்தை ஊற்றார் உறவினருடன் மூன்று முறை வலம் வந்து தலைமைப் புரோகிதரிடமும், வீட்டிற்குப் பெரியவரிடத்திலும் அட்சதை பெற்றுக் கொள்ள வேண்டும், இதற்கும் உற்றார் உறவினர்களை அழைத்து விருந்து வைக்கிறார்கள். அன்று இரவு திதி கொடுத்த இடத்தில் திருவிளக்கு ஏற்றி வழிபடுகிறார்கள் ஆண்டுத் திதியும் மாத அமாவாசை தெர்ப்பணமும் செய்வதை நகரத்தார்கள் வழக்கமாக கொண்டிருக் கிறார்கள். இறந்துபோனவரின் ஆன்மா யாதனா சரீரம் என்ற நுண்ணுடல் கொண்டு தான் செய்த நன்மை தீமைகளுக்கு ஏற்ப புண்ணிய உலகம் அல்லது நரகங்களில் இன்ப துன்பங்களை நுகர்ந்து சூரிய மண்டலத்தை அடைகிறது என்று சாஸ்திரங்கள் கூறுவதாக புரோகிதர்கள் சொல்கிறார்கள் சூரிய மண்டலத்திலிருந்து இறைவன் இட்ட கட்டளை மூலமாகச் சூரியனை பூமி சுற்றிக் கொண்டு வருகிறது. சந்திரன் பூமியையும் சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றிக் கொண்டு வருகிறது. இந்த மூன்றும் ஒரே நேர் கோட்டில் வருகின்ற நாளைத்தான் அமாவாசை என்று கூறுகிறார்கள். அமாவாசையன்று சூரியனுக்கு அருகில் பூமி வருகின்றது. அதனால்தான் அன்று உலகில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கடல் கொந்தளிப்பு, மனநிலைபாதிக்கப்பட்டவர்களின் இயல்பு முதலியவற்றின் தொல்லைகள் அதிகமாக இருக்கும். அமாவாசையன்று சூரியனுக்கு அருகில் பூமி வருகின்ற காரணத்தால் சூரிய மண்டலத்தில் உள்ள இறந்தவரின் ஆன்மா பூமியில் உள்ள தமது உறவினரை நினைக்கிறது. அந்த நேரத்தில் இங்குள்ள இறந்தவருடைய தலைமகன் அவர்களை நினைத்து வழிபட்டால் அந்த எண்ணங்களின் தொடர்பால் அவர்கள் ஆன்மா சாந்தி பெறுகிறது. மூன்று தலைமுறையினருக்கு முற்பட்ட ஆன்மாக்கள் மண்ணுலகில் மறுபிறவி எடுத்திருக்கும் ஆகையால் இறந்தவருக்கு முன்புள்ள முப்பாட்டன் வரை உள்ள மூன்று தலைமுறைக்கே திவசம், அமாவாசை தர்ப்பணம் முதலிய வழிபாடுகள் செய்யப் பெறுகின்றன. ஆண்டு தோறும் திதி கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும் அமாவாசையன்று தர்ப்பணம் செய்வதை நகரத்தார்கள் தங்கள் கடமையாகக் கொண்டிருக்கின்றனர்.

அண்மைக் காலங்களில் விபரம் அறிந்த புரோகிதர்கள் குறைவாக இருப்பதாலும், தர்ப்பணம் கொடுக்கின்றவர்களுக்குச் சுற்றுச் சூழல்களால் செய்ய முடியாத நிலை ஏற்படுவதாலும்

இன்றைய இளைய சமூகத்தினர் பெரும்பாலும் இந்த தர்ப்பணம் கொடுப்பதை செய்வதாக தெரியவில்லை. இது மிகவும் வருந்துதற்குரிய செய்தி.

ஒப்பாரி

"சென்னைப் பல்கலைக்கழகம் 1956-ல் வெளியிட்ட தமிழ் அகராதியில் ஒப்பாரியை, ஒப்பு + ஆரி என்று பிரித்து அழுகைப் பாட்டு என்று பொருள் கூறுகிறது, ஒரு தமிழ் ஆங்கில அகராதி ஒப்பாரிக்கு ஒப்புச் சொல்லி அழுதல் என்று பொருள் கூறுகிறது. அதோடு பெண்களால் பாடப்படுவது என்றும், இறந்தவருக்கும் பிறவற்றிற்கும் ஒப்புச் சொல்லிப் பாடுவது என்றும் கூறப்படுகிறது. இராம நாடகத்தில் யுத்த காண்டத்தில் 18-வது பாட்டில் மகனே என்று ஒப்பாரி சொன்னாள் என்று வருகிறது. இங்கு ஒப்பாரி என்பது அழுகைப் பாட்டு என்ற பொருளிலேயே குறிக்கப் பெறுகின்றது. ஆங்கிலத்தில் ஒப்பாரியை EULOGY, DIRGE, DEATH, LAMENT, MOURNING SONGS என்ற சொற்களால் சுட்டப் பெறுகின்றன. இவைகள் எல்லாம் இறப்புக்சாகப் பாடப்படுவதே என்றாலும் இவற்றில் நுணுக்கமான வேறுபாடுகள் உள்ளன" என்று டாக்டர். சு. சண்முகசுந்தரம், அவர்கள் எழுதிய 'தமிழில் நாட்டுப் புறப்பாடல்கள்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்கள்.

வாழ்க்கையின் முன்னுரை குழந்தை பிறந்தவுடன் பாடுகின்ற தாலாட்டு. முடிவுரை ஒருவர் இறந்தபின் பாடுகின்ற ஒப்பாரிப் பாடல் ஆகும். தமிழில் ஒப்பாரியை பிலாக்கணம், கையறு நிலை புலம்பல், இழவுப்பாட்டு, சாவுப்பாட்டு எனப் பல வகையாகக் கூறுகிறார்கள்.

இந்த ஒப்பாரிப் பாடல், ஒரு பெண், தன் கணவனுக்காகவும், தன் மக்களுக்காகவும், பெற்றோர்களுக்காகவும், உடன் பிறந்தவர்களுக்காகவும், மாமனார் மாமியார்க்காகவும் பாடவேண்டிய சூழ்நிலை ஏற்படும்போது அவர்கள் வாழ்ந்த நிலை, அவரோடு கொண்டிருந்த பாசப்பிணைப்பு, அவருக்குச் செய்த உதவிகள் இவை மட்டுமல்லாமல் அவர்களிடம் காண்கின்ற குறைகளையும் விட்டுவிடாமல் எதுகை மோனையுடன் பாடக் கூடிய கவித்வம் பெற்றவர்கள். இந்தத் தாலாட்டும் ஒப்பாரியும் எழுதிப் பாடப்

படுவனவல்ல. நினைத்த மாத்திரத்தில், சூழ்நிலைக்கு ஏற்ப, தன்னிச்சையாக (ஆங்கிலத்தில் CONTEMPORARY என்று கூறுவார்கள்) பாடுவதில் நகரத்தார் பெண்கள் வல்லமை பெற்றவர்கள். இவர்களுடைய பாடல்களைக் கேட்கும் வாய்ப்புப் பெற்ற தமிழ்ச்சான்றோர்கள் வியப்படைந்து பாராட்டியிருக்கிறார்கள். இந்த இருவகைப் பாடலும் ஏட்டில் எழுதா இலக்கியமாகவும், நாட்டுப்புற இயல்களில் தலைசிறந்ததாகவும், கருதப்பெறுகிறது. ஆயினும் இன்றுள்ள இளைய தலைமுறைப் பெண்களுக்கு பாடத் தெரிவதில்லை. அதை விரும்பி அவர்கள் மேற்கொள்ளத் துணியவுமில்லை. இன்றைக்கு ஏறத்தாழ 65 அல்லது 70 வயதில் உள்ள பெண்களால்தான் ஒப்பாரி பாட முடிகின்றது. அவர்கள் வாய்வழியாகச் சொல்கின்ற பாடல்களைச் செவி வழி கேட்டு எழுதிக் கொண்டால் மட்டுமே அந்தப் பாடல்களின் ஆற்றல் தெரியக்கூடும். இப்போது ஒப்பாரி பாடுதல் என்ற வழக்கமே அருகிவிட்டாலும் நகரத்தார் பெண்கள் பாடிய சில ஒப்பாரிப் பாடல்களை இங்கு தருவது சிந்தனைக்கு நல்ல விருந்தாக அமையும்.

1) *விடிய ஏயிலேறி*
வேம்பாயி (பம்பாய்) போயிறங்கி
காலை ஏயிலேறி
கல்கத்தா போயிறங்கி
மதியம் ஏயிலேறி
மதராசு போய்இறங்கி
அந்தி ஏயிலேறி
அறந்தாங்கி போயிறங்கி
கோடு (கோர்ட்) திறந்து
குறிச்சியிலே உட்கார்ந்து
சர்ச்சியுடன் (ஜட்ஜ்) பேசிவரும்
சமர்த்தர்தான் உங்கள் ஐயா

2) *கல்லுமேல் நின்று*
கணக்கனுக்குச் சேதி சொன்னால்
கல்லும் கிடுகிடுக்கும்
கணக்கனும் திடுக்கிடுவான்
புல்லுமேல் நின்று
புலையனுக்குச் சேதி சொன்னால்

புல்லும் கிடுகிடுக்கும்
பூலையனும் திடுக்கிடுவான்

3) தேடிப் புறப்பட்டா தெருவிலேயுங் காணோம்
நான் வருத்திப் புறப்பட்டா வளவிலேயுங் காணோம்
மனசில் நினைச்சேன்னா மந்தையிலே காணோமே
சிந்தையிலே எண்ணிட்டா நம் திண்ணையிலே காணோமே
பட்டியக் கல்விலே பல்விளக்கக் காணோமே
முத்தணி வாசவிலே முகங்கழுவக் காணோமே
சேனை தளத்தோடே சிரித்திருக்கக் காணோமே
மருதைச் சனத்தோடே மகிந்திருக்கக் காணோமே
கலியாண மின்னோமின்னா,
கட்டிச் சமந்தியைக் கலந்திருக்கக் காணோமே
மங்கள மின்னாலும் மாசேனை
தன்னோடே மகிந்திருக்கக் காணோமே

4) பொடி வயிரத் தம்பிக் கெல்லாம்
பூவசைத்துப் பார்ப்பேன் பொண்ணழைத்து கூட்டுவேன்
மணி வயிரத் தம்பிக்கு
மாலையிட்டுப் பார்ப்பேன் மாதழைத்துக் கூட்டுவேன்
வாவரசி வாராதே நான் மயிலனையாள்
மாலையிட்டுப் பார்ப்பேன் மாதழைத்துக் கூட்டுவேன்
என்னரியாள் தேவி பேரழகிவாராதே
போய்க்கடியாள் பார்ப்பேன்
மாதரசி சானகிக்கு மகிறத் தனம் வாங்கி
மகுந்த பணம் தேவையில்லை
மணிவயிர மன்னருக்கே
மாலையிட வேணுமின்னாள்
வருந்துவார் இல்லையின்னாள்
பெரிய பணம் தேவையில்லை
போர்த்துவார் இல்லையின்னா
பொடிவயிர மன்னருக்கே
பூ சேர்க்க வேணுமின்னாள்

5) எடுத்துக் கொடுத்த மகன்
இன்னொருத்தி பெத்த மஞ்சன்
வாங்கிக் கொடுத்த மஞ்சன்
மற்றொருத்தி பெற்ற மஞ்சன்

6) போர் விசயன் பேர்துலங்க
என்னைப் பெற்ற ஐயா
புதுவிசய ஐயா புண்ணியவார் பேரழைக்க
என் பொன்னும் பிறப்பும்
பிள்ளை ஒத்தை கண்டிருந்தாள்
நான் பிறந்த ஒசத்தி இன்னேன்
பிறந்தெடத்தை மேன்மை இன்னேன்
போகும் சமயம் பொண்ணை அழைச்சு
எங்கையா வாசல் பூமிவந்து சேர்ந்தோமின்னா
என்னைப் பெற்ற ஐயா
என் பிள்ளை தனியனுக்கு
புகுந்த மனையிருக்கு
பெரிய பணம் தேடியிட்டேன்
உன் பொண்ணு தனியாளை
பூச்சேத்துப்பார் ஆக்கி
அவுக பெற்று முதல் ஆவா யின்னா
வளர்ந்த இடத்தை மேன்மையின்னேன்
படப்பை ஒசத்தி இன்னேன்
எங்கையா வாசலிலே
பள்ளயத்தை மேன்மை இன்னேன்
மாதரசி எல்லையிலே
மாதழைத்துப் பார்க்கையிலே
மச்சமில்லை நேரமின்னேன்
வையகத்தைப் போல
மகிரத் தனம் வாங்கி
எங்கையா வாசலிலே
மலர் சேர்த்துப் பார்ப்பமின்னேஞ்
மாதழைத்து விட்ட் மின்னேன்
மாதழைச்சு விட்ட பின்பு
மாது கெடையும்
மகிழ்ந்த கெடை தோணி
மன்னிக் கிடந்தோ மின்னேன்
என்னைப் பெற்ற ஐயா
மறுத்திருந்த ஐயாக்கள்
வயிரமுடி ராசாக்கள்
உங்க வளவுவந்து சேந்தாக
என்னைப் பெற்ற ஐயா

என் பிள்ளை தனியனுக்கு
புகுந்த மனையிருக்கு
பெரிய பணம் தேடிவச்சேன்
உன் மாது தனியாள்
எங்க வாசல்
மஞ்சள் தனியருக்கு
மலர் சேர்த்துப் பாத்தாக
வளர்த்து முதல் ஆவாக
வாழ்ந்தும் இருப்பாக
வாழும் மக்கள் அப்பத்தா
இந்த மஞ்சள் சிறுக்கா
மாலையிடம் போறமின்னு
வாழும் சமயம்
வார்த்தை மொழி சொன்னால்
மலர் சேர்க்க வேணமின்னு
மாதை அழைச்சு
வளவுவந்து சேர்ந்துவிட்டாள்

7) குப்பென்று பூத்திட்டாள்
கொடி நெருங்கிக் காய்த்திட்டாள்
சில்லென்று பூத்திட்டாள்
செடி நெருங்கிக் காய்த்திட்டாள்
மகிற மக்கள் கண்டிருக்கா
மாற்றி மக்கள் பெற்றிருக்கா
போத மக்கள் கண்டிருக்கா
பின்னி மக்கள் பெற்றிருக்கா
ஆயா நான் காணாத
அதிமதுர செண்பகப்பூ
தானறிந்து பூத்தமின்னா
தரமறிந்து காய்ச்சமின்னா

☆